# திராவிடநாடு

-7-60 | வார வெளியீடு | விலை 16 காசு

## வெற்றி தேடு

—[நா. நாராயணன்]—

அன்றொருநாள் இமயத்தில் புலி பொறித்தே
    ஆண்டதொரு பரம்பரையும், மெய்வேல் கொண்டு
வென்றிட்ட தமிழ்மகனும் அஞ்சா நெஞ்ச
    வீரர்களும் இன்றில்லை என்றோ இந்தி
இன்றெடுத்து வருகின்றாய்? தமிழர் கூட்டம்
    ஏந்திவிட்டார் போர்க்கொடியை ஓடு! ஓடு!
குன்றொத்த பெருந்தோளா! கடல்கள் எல்லாம்
    கொடிநாட்டி வாழ்ந்தவனே! என்ன தூக்கம்?

"போர்க்கொடியே நாடெங்கும், உணர்ச்சி வெள்ளம்
    பொங்குகின்ற பேரிளைஞர் கூட்டம், எங்கும்
ஆர்க்கின்ற நாவன்றி வேறொன் றில்லை
    அமைத்திடுக களமென்றே" கூவு கின்ற
சீரணிந்த செம்மல்களே! திரண்டு வாரீர்!
    செருக்கறுத்துத் தமிழ்காத்தே அரசு—மீட்க!
வீரரணி வீரரணி வீடு தோறும்
    வேரறுப்போம் இந்திதனை என்றே வாரீர்!

புறப்படுவாய் போருக்கு முரசு கேட்டுப்
    புடைத்தெழுந்த பெருந்தோளா! கனகன் நாவை
அறுத்தெறிந்த வரிப்புலியே! அழைத்து விட்டார்
    ஆதிக்க இந்திதனை நொறுக்க இன்னாள்
சிறைப்பட்ட இழிதகைமை நீக்கு! வீரத்
    திண்தோளும் நிமிர்நெஞ்சும் எங்கே? பார்பார்
அறப்போரைத் துவக்கி விட்டார் நமது "சம்பத்!"
    அப்படைக்குத் தம்பி!வா வெற்றி தேடு.



# மானம்?

வழக்குமன்றத்திலே குற்றக் கூண்டிலே நின்றுகொண்டிருந்த முத்தழகுவைப் பார்த்து நீதிபதி, "நீ திருடியது உண்மைதானா?" என்றார்.

"உண்மைதான்......" என்று சொல்லிவிட்டு நீதிமன்றத்தைச் சுற்றித் தன் கண்ணோட்டத்தை விட்டான்.

"உண்மைதான்" இந்தச் சொல்லைக் கேட்டவுடன் நீதிமன்றத்திலிருந்த பல உருவங்கள் பலப்பல கோணங்களிலே காட்சியளித்ததைப் பார்த்தபொழுது, அவனை அறியாமலே அவனுக்குச் சிரிப்பேற்பட்டது. எப்படிப்பட்ட மனித உருவங்கள் எத்தனையெத்தனை ஆசாபாசங்களை உள்ளடக்கிக் கொண்டு உலகில் நீதி நேர்மை என்பனபோன்ற கவசங்களைப் பூண்டுகொண்டு உலாவுகின்ற நல்ல செப்படிவித்தைக்காரர்கள் தான் என்று எண்ணியது அவன் மனம்.

தன் எதிரியை நோக்கினான்; அவர் மனம் மகிழ்ச்சியில் திளைத்துக்கொண்டிருந்தது. தன் பிரதிவாதியே குற்றத்தை ஒப்புக்கொண்ட பிறகு அதைவிட அவருக்கென்னவேண்டும்?

அடுத்து, 'எதிரியின் மகள்—தன்......' அவளை நோக்கினான். அவள் விரலைச் சொருகியபடியே ஒத்துக்கொள்ளாதீர்கள் என்ற பார்வையில் பரிதாபமாகக் காட்சியளித்தாள்.

எதிரியின் வக்கீல்... சிக்கலான வழக்கில் வெற்றி கண்டு பெரிய இடத்தில் பெயரெடுக்கும் வாய்ப்பைத் தகர்த்துவிட்டானே என்ற நிலையில் சோர்ந்து காணப்பட்டார். வக்கீலுக்கு நல்லதுதானே குற்றவாளியே குற்றத்தை ஒப்புக்கொள்வது என்று எண்ணத்தோன்றும். என்றாலும் குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் அக்குற்றத்தை வக்கீல் தன் வாதத்திறமையால் நிரூபித்து வழக்கில் வெற்றி பெறுவது அதைவிடப் பெருத்த வெற்றியல்லவா? அப்படிப்பட்ட வெற்றிதானே வக்கீலுக்குவரவைக் கொடுக்கும். அதையல்லவா இந்த முத்தழகு "உண்மைதான்" என்ற ஒரே சொல்லாலே உடைத்துவிட்டான்.

முத்தழகுவின் தாயோ, பாவம்; பெற்ற வயிறு பற்றியெரிந்தது. அநியாயமாகத் திருட்டு வழக்கில் சிக்கி வதைபடுகிறானே என்று எண்ணி எரிமலையாகக் குமுறியது. அதிலும் 'உண்மைதான்' என்று தன் மகனே ஒத்துக்கொள்ளும் பொழுது... உலகமே புகை புகையாகிப் பெரும் சாம்பல் மேடாகக் காட்சியளித்ததிலும் வியப்பில்லை.

இப்படியாக, நீதிமன்றமே 'உண்மைதான்' என்ற ஒரு சிறு சொல்லால் தாக்கப்பட்டுப் பலப்பல எண்ணங்களின் பிரதிபலிப்பாகக் காட்சியளித்தது. அதன் உண்மையை

கரந்தை—கணேசன்

அறிந்ததால் அவனை அறியாமலே அவனுக்குச் சிரிப்பேற்பட்டது. மெல்ல அடக்கிக்கொண்டான். ஆனால் முத்தழகுவோ இத்தனையையும் தன் கண்ணோட்டம் ஒன்றினாலேயே கண்டுகொண்டான். சிலருடைய கண்களுக்குப் 'பலரின் உள் மனத்திற்குள்ளேயே புகுந்து உளவறியும் ஆற்றல் உண்டு. இல்லாவிட்டால் உலகில் காதல் என்ற சொல்லுக்கே வேலையில்லையே!

அதற்குள் நீதிபதி, "உண்மையானால் ஏன் திருடினாய்?" என்றார். அடுத்த கணை அவனைத் தாக்கியது.

முத்தழகு விழித்த நிலையில், 'மன்னிக்கவும் நீதிபதியவர்களே! நான் முதற் கேள்விக்கே முற்
விடை கூறிவிடவில்லையே!''
றான். முற்றுப்புள்ளியைக்
வாக்கிவிடுவான் என்று யா
எதிர்பார்க்கவே இல்லையாதல
எல்லோர் மனத்திலும் ஆச்சரி
குறி அலைமோதியது.

நீதிபதி, "அப்படியானால்...

"திருடியது உண்மைதான்.
ஆனால் நீங்கள் கருதுவது
நான் என் முதலாளியின் வீ
உள்ள தங்க நகைகள் எ
திருடிவிடவில்லை. தங்கம் போ
அங்கம் கொண்ட தளிர்க்
யாள், அதோ அமர்ந்திருக்கி
அவளின் உள்ளத்தைத் தி
னேன். அதற்காக இப்படி
அற்பத்தனமான திருட்டுக்குற்
ஷைச் சாட்டி என்னை உங்கள்
னாலே கொண்டுவந்து நிறு
யிருக்கிறார்கள்; ஊரை ஏமா
இப்படியொரு உளுத்த தி
போட்டுக் காட்டுகிறார்கள். நீ
அந்தப் பெண்ணையே அழை
விசாரித்துப் பாருங்கள்'' என்
மூச்சுப் பிடித்து முத்துக்குளி
வன் கரை சேர்ந்தது போன்
தது.

வாதியின் உள்ளமோ துடித்
தன் தலையை எந்தப்புறம் தி
வது என்று புரியாமலே திண
னார். தான் எதிர்பார்க்கவே
லாத இந்த வார்த்தைகளை வி
தன்மானத்தைக் காத்துக்
ளச் செய்த இந்த நாடகத்
மூலமே தன்மானத்தை இப்
பலரறிய விலைபேசுவான் எ
புரிந்திருந்தால், இந்த வழி
வந்திருக்கமாட்டார். தற்போ
"இல்லை...... இல்லை...... அ
பொய் பேசுகிறான்'' என்று ப
யக் கத்திவிட வேண்டுமெ
அவர் மனம் முந்தியது—ஆ
தொண்டைக்குழியில் இரு
சொற்கள் வெடித்துச் சி

(4-ம் பக்கம் பார்க்க)

# சோமாலிலாந்து சொல்லும் பாடம்

ஆண்டுச் சந்தா ரூ. 8. (10-7-60) தனிப் பிரதி 16-காசு இதழ் 52

"இருட்டுக் கண்ட"மான ஆப்பிரிக்காவில் ஒளி கின்றது. அடிமை இருட்டு அகலுகின்றது. மை விலங்கு முறிகின்றது—மக்கள் உரிமை ட்கைகொண்டு கிளர்ந்து எழுகின்றனர். 'நமது ட்டில் எம்மையாள நீவிர் யார்?' என்று வெள்ளை ரைப் பார்த்துக் கேட்கின்றனர். 'இதோ போகின் ரும், உமது நாடு உமக்கே' என்று சொல்லிவிட்டு வர்கள் கப்பல் ஏறுகின்றனர். 'எங்கும் சுதந்திரம் ன்பதே பேச்சு' என்று பாரதியார் பாடியது இன்று ங்கே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. நித்தம் ரு நாடு உரிமை பெறுகிறது; உலகின்முன் நிமிர்ந்து ற்கின்றது.

அண்மையில் அப்படி விடுதலைபெற்ற நாடுகளில் ன்றுதான் சோமாலிலாந்து. "விடுதலை நீடு வாழ்க" ன்று மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தவாறு டெங்கும், நகரெங்கும், ஊரெங்கும், தெருவெங்கும் க் களிபேருவகை கொண்டு, கூத்தாடுகின்றனர். ரிமையின் சுவையை உணருகின்றனர்.

அந்த நாடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ன்று ஆங்கிலேயர் இடமும், மற்றது இத்தாலியின் மும் இதுநாள்வரை அடிமைப்பட்டுக் கிடந்தன. ன்று அந்த இரண்டு பகுதிகளுமே விடுதலைபெற்று ழாக் கொண்டாடுகின்றன.

ஆங்கிலேயர் ஆண்ட பகுதியில் சுமார் ஆறு இலட்சம் சோமாலியர்; இத்தாலியர் ஆண்ட பகுதி ல் சுமார் பதின்மூன்று இலட்சம் சோமாலியர்; ஆக, த்தொன்பது (19) இலட்ச மக்கள் விடுதலை பெறு ன்றனர். பத்தொன்பது இலட்சம் பேரே கொண்ட டு சோமாலிலாந்து.

சென்னை நகரின் மக்கள் தொகையும் ஏறத்தாழ இதே அளவுதான். சென்னை அளவு உள்ள ஒரு டு உரிமை பெறுகின்றது. அதிலே அந்த நாட்டு க்கள் உவகைகொண்டு ஆடியும் பாடியும் தங்கள் கிழ்ச்சியை வெளிப்படுத்திக்கொள்கின்றனர்.

தமிழர் மூன்று கோடி பேர், திராவிடர் ஒன்பது கோடி பேர், இவர்கள் தனித்து வாழவேண்டும் என்று சொன்னால், பிரிந்தால் சின்ன நாடு ஆகிவிடும் என்று இங்கே சிலர் சொல்லக்கேட்கின்றோம். அங்கே சோமாலிலாந்து விடுதலை பெறுகிறது; விழா எடுத்து மகிழ்கின்றது.

விடுதலை கிடக்கட்டும்—அங்கே என்னதான் விளைகிறது–நாடுவளமானதோ—குறைவற்ற பெருநிதி படைத்ததோ?..."புதிய நாடுகள் இரண்டும் வரண்ட பிரதேசங்கள்தான்; தோல், தீக்கோழி இறகு, பிசின் வகைகள், யானைத் தந்தம் ஆகியவை அங்கு கிடைக் கின்றன. கால்நடை ஒட்டகங்கள் ஆகியவை வளர்க் கப்படுகின்றன. பருத்தி பயிர் செய்யப்படுகிறது"—இது அந்த நாட்டைப்பற்றி நம்முடைய நாட்டுத் 'தேசிய' இதழ் ஒன்று தரும் விளக்கம். தீக்கோழி யின் இறகையும் பிசினையும் நம்பியிருக்கும் சோமாலி விடுதலை பெறுகிறது—பத்தொன்பது இலட்சம் மக் களே கொண்ட அந்த நாட்டுக்கு உரிமைச் செல்வம் கிடைத்துவிட்டது, அதனால் அது விழா நடத்தி மகிழுகின்றது.

ஆனால், நாமோ, இங்கே வீணர்தம் வெற்றுரை களைக் கேட்கும் நிலையில் உள்ளோம். விடுதலை என்ன விலை என்கின்றனர் ஆள வந்துள்ள அமைச் சர்கள். நாட்டு மக்களின் உணர்ச்சியை மதிக்காது ஆணவமான பேச்சிலும், அலட்சியமான போக்கிலும் தங்களுடைய காலத்தைச் செலவிடுகின்றனர்.

நாடு வாழ்வதும் தாழ்வதும் அதன் அளவிலே இல்லை; மக்கள் தொகையிலே இல்லை; வளத்திலே, உழைக்கும் வகையிலேதான் ஒரு நாட்டின் வாழ்வு அமைந்திருக்கிறது என்பதையும் உணர மறுக்கின் றனர். காரணங்கள் ஆயிரம் காட்டினாலும் காணக் கூசுகின்றனர். கண்ட இடமெல்லாம் ஏசுகின்றனர்.

ஆனால், சோமாலிலாந்து சொல்லும் பாடத்தை யேனும் அவர்கள் அறிவார்களாக!

2-ம் பக்கத் தொடர்ச்சி

மறுத்துவிட்டன. புலி பூனையாவது உண்டு, எதிர்பாராத தாக்குதல் ஏற்படும் பொழுது என்பதற்கு ஏற்ப அவர் அங்கு காட்சியளித்தார்.

முதலாளியின்மகள் மல்லிகாவை நீதிபதி கூண்டிலேறு என்று சொல்லவே இல்லை. மறுகணம் சாட்சிக் கூண்டிலே காட்சியளித்தாள்.

நீதிபதி, 'நீதான்......' முடிக்கவில்லை; மல்லி முறுவலித்தாள்.

'ஆம், நான்தான்..........,வாதியின் மகள்......வழக்கிலே ஒன்றுமில்லை. முத்தழகர் கூறுவது முற்றும் உண்மை. அவர் என் உள்ளத்தைத்தான் திருடினார்; இந்த உதவாக்கரைகள் ஊரை ஏய்க்க ஒன்றுமே செய்யாத அவரைத் திருடன்" என்கின்றனர்.

நீதிபதி, "அவன் வீட்டிலிருந்து போலீசார் கைப்பற்றிய இந்த நகைகள்"?

"ஊருக்குப் பெரியவர்கள் நினைத்தால் ஏழைகளின் வீட்டில் தங்க நகைகள் என்ன......தங்கப்பாளங்களையே காட்டமுடியும்" என்றாள் மல்லிகா.

"அப்படியானால், இந்தத் தங்க நகைகளை யாரோ............"

"இதிலே நீட்டி முடக்க என்ன இருக்கிறது நீதிபதியவர்களே! இதோ இந்தக் கைங்கரியத்தைச் செய்த வையாண்டியைக் கேட்டுவிட்டால் போகிறது............!

வையாண்டியை விசாரிக்க வேண்டிய தேவை இனி இல்லை என்று சொல்லாமலே அறிவித்துக் கொள்வதுபோல் மல்லியின் தந்தை நீதி மன்றத்தைவிட்டு மெல்ல நகர்ந்துவிட்டார். இப்படி எல்லாரும் சேர்ந்து தனக்கு எதிராகச் சதி செய்வார்கள் என்று அவருக்கு எப்படிப் புரியும்......... அவரைப் பொறுத்தவரையில் எல்லாம் சதிதான். எதிர்பார்த்த காரியம் எதிர்பார்த்த வேளையில் எதிர்பார்த்தே இராத சிலரால் எதிர்மாறாகக் கூறப்படுகிற பொழுது ஏற்படுகிற அதிர்ச்சியின் உண்மைப் பெயர் வேறு எதுவாக இருந்தாலும், அவரைப் பொறுத்தவரையில் அது சதிதான். இன்றைய ஆட்டத்தில் நமக்குத்தான் முழுவெற்றி என்ற முன்னேற்பாட்டோடு விளையாட்டு வெளியில் இறங்கியவனுக்கு முதல் வட்டத்திலேயே "வெளியே" என்றால்...........!

வீட்டிற்கு வந்தார் முதலாளி குணசீலர். காரைவிட்டு இறங்கி வீட்டிற்குள் எப்படித்தான் போனாரோ, அது அவருக்கே புரியாத விடயம். காரில் வரும் பொழுதுதான் என்ன? வீதியில் போவோர் வருவோர் எல்லாம் தன்னைப் பார்ப்பதிலிருந்தே வழக்கு என்ன ஆயிற்று? என்ற கேள்விக்குறியை அவரவர்கள் தங்கள் முகத்திலே எழுப்பிக் காட்டுவதாகக் கண்டார். பரிதாபத்துக்குரிய நிலையில் சர்க்கஸ் கூண்டுக்குள்ளே அடைத்துக் கொண்டு வரும் மிருகத்தை ஊரார் பார்ப்பதைப்போல் தன்னை எல்லாரும் பார்க்கிறார்கள் என்று எண்ணினார். எப்பொழுதுமே சஞ்சலப்பட்டுவிட்ட மனத்தில் சாந்தத்தை எதிர்பார்க்க முடியாது. சிந்திச் சிதறிக் காற்றிலே பறக்கும் பதர்தான் அதுவும்.

வீட்டினுள்ளே ஒவ்வொரு பொருளும் தன்னைப் பார்த்து வழக்கு என்ன ஆயிற்று என்ற கேள்விக் குறியைக் கிளப்பி விட்டுவிட்டு—பதிலையே எதிர்பாராமல் தன்னை நோக்கிச் சிரிப்பதுபோலப்பட்டது அவருக்கு. எல்லாப் பொருள்களையுமே அடித்து நொறுக்கிச் சுக்கு நூறாக்கிவிட்டால்... அந்தச் சுக்கு நூறுகளும் இவரைச் சுற்றிச் சிரிக்கத்தானே செய்யும். தன்னைச் சுற்றிலும்... தனக்கென்று யாராவது ஒருவர்... வேண்டியவர்...... இருப்பதாகவே படவில்லை. சிங்கங்கள் உலவுகின்ற காடும்,வீடும் ஒன்றாகக் காட்சியளித்தது அவருக்கு.

"ஐயோ... மானம்..." அதைக் காப்பாற்றப்போய் இவ்வளவு அடியா? அதுமட்டுமல்ல; காப்பாற்றப்போன இடத்திலேயே அது காற்றில் பறந்த காட்சியைத் தன் கண்கண்ட கொடுமை...

"மானம் போச்சே... என் மானம் மரியாதை... எல்லாம் போச்சே..." கத்திவிடவேண்டும், கட்டிடம் முழுமையும் அதிரவேண்டும் என்று தான் எண்ணினார். அப்பொழுது தான் தன் மனத்திலே உள்ள சுமை, மானச் சுமை இறங்கும் என்றுகூடக் கருதினார். ஆனால்... புரையோடிவிட்ட புண்ணுக்கு நன்றாகத் தெரிந்தும் புனுகுதான் தடவித் தீரவேண்டியிருக்கிறது சில வேளைகளில். இல்லாவிட்டால் பிறரின் கத்தியல்லவா அந்தப் புண்ணைக் கீறிவிடும்.

நேரே படுக்கையில் சென்று விழுந்தார். எழுந்து சென்று கதவைத் தாளிட்டுவிட்டு முறையும் செனறு விழுந் தாகப்பட்டுவிட்டனா, நீரை கித் தவம் கிடப்பதைப் குழம்பிபோன அவர் மன அமைதியைத் தேடியது. தெளிந்து மாண்டுவிட்ட கள் என்றாலும், மறையாது ளும் காட்சிகள் அவர் மன நிழலாடின.

தன் மகள் மல்லிக்கும்—கன் முத்தழகுக்கும் காதல்... ஊரறிந்த, உலகறிந்த பிறகு சிலருக்குத் தெரிந்தது. இ விட்டால் இவ்விஷயத்தை எ யெல்லாமோ மூடிமறைத்து ருப்பார். ஊரறிந்த உளவை வழியிலே திருப்பிவிடவேண் இல்லாவிட்டால் ஊர் வாயை முடியாதே உலைவாயை மூடி என்று எண்ணியவராக, இ சூழ்ச்சி பண்ணினார். அ விளைவுதான் முத்தழகுமீது டுக் குற்றச்சாட்டு, வழக்கு ரணை எல்லாம்...

வீதிக்கு வந்துவிட்ட டைய மானத்தை வீட் கொண்டுபோய் மீண்டும் சே விடவேண்டும். அதற்கு தான் சரியானவழியென்று தான் முத்தழகுமீது தி குற்றம் சுமத்தி வழக்குத் தொ தார். வழக்கின் முடிவோ... நம்பி வழக்கைத் தொடுத்த அந்த இருவர்...... தன் மகள் வேலையாள்வையாண்டி ..வீதி திரிந்த மானத்தைக் கடைவீதி கொண்டுவந்துவிட்டு இ ஊரறிந்த இரகசியமாக்கிவிட் நாளை இதே பத்திரிகைகளில் மாக... நாடறிந்த செய் விடும். அப்புறம் குணசீ குடும்பக் கவுரவம், அந் மரியாதை, மானம் யாவும் காற்றிலே பறக்கும் இலவம் தான.

இதற்குள் ஒருவன் ஓ கதவைத் தட்டி "வழக்கைத் விட்டார்களாம்" என்றான்.

"சரிடா... போடா... போ இதைவேறெ சொல்ல வ டான்" என்று சீறினார். குண அவர் மனம். வண்டியில் பொறிகள் வேலைசெய்தாலும் னும் ஓடமுடியாமல் பின்னு முடியாமல் தவிக்கும் பிரேக் காரைப்போலத் தவித்தது.

[அடு — இதழில் …]

## காஞ்சீபுரம்

10-7-60.

# தம்பி !

பிசோ! உயிரோடு! அல்லது பிணமாக!!—கொண்டுவருபவருக்குப் பத்தாயிரம் ரூபாய் பரிசு தரப்படும்.

'இந்திய' துரைத்தனம் இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட்டு ஆண்டு மூன்றாகப்போகிறது!

இப்போது, பிசோ சார்பாக வேறோர் விளம்பரம் வெளியிடலாம் போல இருக்கிறது, வேடிக்கைக்காக.

பிசோ, எப்படி இங்கிருந்து, உளவாளிகள், வேவு பார்ப்போர், உயர்தர இராணுவ அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் ஆகியோரின் கண்களில் மிளகாய்ப்பொடி தூவிவிட்டு, இலண்டன்போக முடிந்தது என்பதைக் கண்டறிந்து கூறுவோருக்கு 20000 ரூபாய் பரிசளிக்கப்படும்.

மலைநாட்டு மாவீரன் என்று, நாகர்கள், அவனை வாழ்த்துகிறார்கள்.

மண்டை ஓடுகளை மாலையாக அணிந்து கூத்தாடும்; காட்டுமிராண்டித் தலைவன், என்று, டெல்லி கூறுகிறது.

அந்தப் பிசோ இலண்டன் நகரில் இருக்கிறான்—அரசியல் தலைவர்களைக் காண்கிறான், பத்திரிகைக்காரரிடம் உரையாடுகிறான்; தாயகம் அடிமைப்பட்டிருப்பது பற்றிய விளக்கத்தை உலகுக்கு அறிவித்து நீதிகேட்கப் போகிறேன், என்று அறிக்கை விடுகிறான்.

இறந்துவிட்டிருக்கக்கூடும், என்று முன்பு கூறினோர், இன்று இளித்தவாயர் என்ற பட்டம் பெற்றுச் சுமக்கின்றனர்—அவனோ, விடுதலை வீரர்கள் விரும்பிச் சென்று அடைக்கலம் தேடிடும் திருத்தலம் போயுள்ளான்.

நாகர் தனி இனம்! நாகர்களுக்குத் தனி மொழி! நாகர்களுக்குத் தனிக் கலாசாரம்! ஆகவே, நாகநாடு தனி அரசு ஆகவேண்டும்!—என்பது பிசோவின், விடுதலைக்கீதம்.

நீங்களும் இந்தியர்தான், ஆனால் மலைஜாதியினர்; உங்கள் நடை உடை மாறுபட்டிருக்கலாம், ஆனால் உள்ளம் இந்திய உள்ளம்; காட்டுக்கூத்தும் வேட்டைப்பாட்டும் கலையாக இருக்கலாம். ஆனால் அதுவும் பாரதப்பண்பாட்டிலே ஒருவகைதான்! எனவே, தனி அரசு கூடாது, பேரரசிலே இணைந்து இருக்கவேண்டும்—மறுத்தால், படை இருக்கிறது பலமாக; குண்டுகள் உள்ளன மாரிபோல் பொழிய; தலைவர்

# குருதி கலந்த மண்

இருக்கிறார், திம்மைய்யா!—என்று டில்லி கூறிற்று; கூவிற்று; மிரட்டிப்பார்த்தது.

மலை அரண்களைத் தூளாக்கினர், புதிய அரண்கள் அமைத்தனர், நாகர்கள்.

படைகளை ஏவினர் தாக்க; பதுங்கினர் நாகர்கள், சமயம் பார்த்துத் திருப்பித்தாக்க!

விமானம் வட்டமிட்டது; அடர்ந்த காடுகளிலே ஒளிந்துகொண்டு, நாகர்கள் கெக்கலி செய்தனர்.

மாமன் பிடிபட்டான் மைத்துனன் கொல்லப்பட்டான், வலது கரமாக இருந்தவனை வளைத்துப் பிடித்துக்கொண்டோம், இடது கரமாக இருந்தவனைப் பிடித்திழுத்துவந்தோம்; அணிவகுப்பு சின்னாபின்னமாகிவிட்டது, தங்க இடமின்றித், தக்க துணையின்றித் தலை தப்பாது என்று தெரிந்து திகில் கொண்டு, அலைந்து திரிகிறான் பிசோ, என்றனர்.

சென்றகிழமை, அவனை, ஜெயப்பிரகாஷ் நாராயணன், இலண்டன் நகரில் கண்டு பேசினார். என்று இதழ்கள் தெரிவிக்கின்றன.

தம்பி! நாகநாடு, தனிநாடு ஆகவேண்டும், என்று கேட்பதற்குக் காட்டப்படும் காரணங்களைவிட, ஆதாரங்களைவிட, ஆயிரமாயிரம் மடங்கு அதிகமான, துப்புரவான, ஆதாரம், குவிந்துகிடக்கிறது, நமக்கு—திராவிடருக்கு.

நாகர், மலைஜாதியினர் — ஆடுவதும் பாடுவதும் அடவியில்! தேடுவதும் பெறுவதும், உயிர்வாழ உணவு வகைகளை!

திராவிடரோ, வீரமரபினர், வாகைசூடியோர், வளம்பல பெற்றவர், வரலாற்றுப்புகழ்கொண்டவர்கள்.

திராவிடரின் தனி மரபு — தரணிக்குக் கிடைத்துள்ள, பல அணிகலன்களிலே சிறப்பானதொன்றாகும்.

அதனை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் நெஞ்சு நெக்குருகி நிற்கிறோம். இதனை அறியாததால், வடவர், நம்மை நையாண்டிசெய்து கொடுமைப்படுத்துகின்றனர்.

நாம் யார் என்பதை நமக்குக்காட்ட, நமது தாய் மொழியாம் தமிழ், கொடி இழந்து கொற்றம் இழந்து, ஈட்டியது இழந்து, இனிமை பலவும் இழந்துகிடந்துழலும், இந்த நாட்களிலும், துணைநிற்கிறது, மனப்பிணி போக்கிவருகிறது.

அந்த அழகு தமிழ் மொழியினை அணைத்து அழித்திட, ஏவுகின்றனர், இந்தியினை.

*

மொழி விஷயத்தை இவ்வளவு பெரிதாக்கலாமா என்று பேசுகிறார்கள் சிலர் — அவர்கள் வேறு ஏதோ, மிகப்பெரிய, மனிதகுலத்தின் மேம்பாட்டுக்கான, விஷயத்தைக் கவனித்துக்கொண்டு இசைபட வாழ்ந்துகொண்டிருப்போரோ எனில், இல்லை, தம்பி! இல்லை! வெந்ததைத் தின்றுவிட்டு வாயில் வந்ததைப் பேசிடுவோர், அல்லது கிடைத்தது பறிபோகாதிருக்க, கைகட்டி வாய்பொத்திக் கிடக்கும் போக்கினர். வாயும் வயிறும் தவிர, வேறெதுபற்றியும் கவலை கொள்ளா மனிதர்கள்! மனிதர்களா!! மனித உருவங்கள்!! இவர்கள் பேசுகிறார்கள், மொழிபற்றித் தகராறு கூடாது, என்று!!

தம்பி! நான் இதை எழுதிக்கொண்டிருக்[கும்] இந்த நேரத்தில், அசாம் மாநிலத்தில், பல இடங்க[ளில்] பட்டாளம் காவல்புரிந்துகொண்டிருக்கிறது போலீ[சுக்]குத் துணை நின்று; கிளர்ச்சியை அடக்க!

அசாமியர், வங்காளிகளைத் தாக்குகிறார்கள்.

வகையாக அசாமியர் சிக்கிக்கொண்டால், [வங்]காளிகள் பதிலுக்குத் தாக்குகிறார்கள்.

வங்காளிகளின் கடைகள் சூறையாடப்படு[கின்]றன! கொலை, கொள்ளை, தீவைத்தல் போ[ன்ற] வெறுக்கத்தக்க, கண்டிக்கத்தக்க செயல்கள் [நடக்]கின்றன.

வங்காளப் பத்திரிகைகளை அசாமியர் கொளு[த்து]கின்றனர்.

வங்காள மொழி ஒழிக! வங்காள ஆதிக்[கம்] ஒழிக! வங்காளிகள் ஒழிக!!—என்று அசாமிய இ[ளை]ஞர்கள் முழக்கம் எழுப்புகின்றனர்.

அசாமிய மொழி ஆதிக்கம் ஒழிக! அசா[மிய] வெறி ஒழிக! என்று வங்காளிகள் முழக்[குகி]றார்கள். வங்காளிகள் இனி அசாமில் இ[ருக்க] முடியாது என்று அஞ்சி, சாரை சாரையாக, வ[ங்காளம்] திரும்புகின்றனர்.

வங்காளிகளுக்கும் அசாமியருக்கும், என்ன [த]கராறு? மொழிப் பிரச்சினையேதான்! வேறு ஒன்[றும்] இல்லை.

அசாம் மாநிலத்தில், மிகப் பெரும் அள[வில்] வங்காளிகள் குடிஏறிப் பொருளாதார வசதியு[டன்] வாழ்ந்து வருகிறார்கள்.

அசாமில் உள்ள அசாமியரைவிட, வங்காளி[கள்] வசதியுடன் வாழக்காணும், அசாமியருக்கு, எ[ன்ன] தோன்றும்!! மனக் குமுறல்! நமது நாட்டுக்குள் நுழைந்து, வியாபாரத்தை, தொழிலை, அலுவல்க[ளை]க் கைப்பற்றிக்கொண்டு கொட்டமடிக்கிறார்கள், வ[ந்]தார்; நாம் கிடக்கிறோம், வகையற்று; செ! என்ன [வ]சைப்பிழைப்பு இது!!—என்ற எண்ணம் குடைகி[றது].

ஆண்டுக்கு இரண்டுமுறை, ஆகஸ்ட்டுத் தி[ங்கள்] 15-ம் நாளும், ஜனவரி 26-ம் நாளும், தலைவர்கள் தேசமளிக்கிறார்கள், அசாமியராயினும் வங்கா[ளி]ராயினும், பீகாரியானாலும் ஒரியாவாயினும், எல்[லோ]ரும் பாரத புத்ரர்கள்! இந்தியர்கள்!! என்று. [ஜெய்] ஹிந்த்! போடுகின்றனர்! பிறகோ?

"அந்தச் சிமெண்டுக் கம்பெனி, யாரு[டை]யது?"

"வங்காளியுடையதுதான்!"

"நேற்றுக் கலாமண்டபத்திலே பாடிய..."

"வித்வானைக் கேட்கிறாயா? முகர்ஜி! கத்தா!"

"வங்காளியா?"

"ஆமாம்!"

இப்படி உரையாடல்! இது உள்ளத்திலே [எ]ன்னென்ன எண்ணங்களை எழச்செய்யும்?

தம்பி! இந்தச் சமயத்தில், அசாம் துரைத்[தனத்]தார், சட்டத்துக்கும் நியாயத்துக்கும் கட்டுப்[படாத] நிலையில், அசாம்மொழியை அசாம் மாநிலத்தில் ஆட்சி[மொழியாக] ஆக்குவதற்கான சட்டம் செய்ய இருப்பதாக அறிவித்தனர்.

...அமளி! அசாமியமொழி ஆட்சிமொழி ஆகிவிட்...ல், வங்காளிகளான, எங்கள் கதி என்ன ஆவது? ...ாமிய மொழி கற்றவரன்றோ, அலுவலகத்தில் ...ம்பெற முடியும்? அசாமிய மொழிக்கல்லவோ ஏற் ... ஏற்பட்டுவிடும்? பிறகு? வங்காள மொழிக்கார ...க்கு இங்கு என்னவேலை? என்றல்லவா, அசாமியர் ...ட்கத் துணிவர் — என்று எண்ணினர் வங்காளி ...; கொதித்தனர்.

"இங்கு என்னவேலை? என்று எப்போதோ, ...ட்பதா! இதோ, இப்போதே, கேட்கிறோம். வங்கம் ...ருக்கும்போது, வங்காளிக்கு இங்கு என்னவேலை?" ...ன்று அசாமியர் அறைகின்றனர், ஆத்திரத்துடன். ...மளி!! துப்பாக்கி அமுல் நடத்துகிறது! துடுக்குத் ...னம் தலைவிரித்தாடுகிறது!

தம்பி! இந்தப் பிரச்சினையிலே இருக்கிற, நியாய ...நியாயம், இருக்கட்டும் ஒருபுறம்—மொழி, வாழவழி ...ட்டுகிறது; ஆதிக்கம் நடத்தக் கருவியாகிறது— ...ன்பது விளங்குகிறதல்லவா? கவனிக்கச்சொல்லு, ...ருத்திலே கடுவிஷம் கலவாத நிலையிலுள்ள காங்கிர ...ரிடம்.

இந்தியா ஒரேநாடு! நாம், எம்மொழி எனினும், ...ம்மதம் எனினும், இந்தியர்—என்ற பேச்சுக்கும், ...சாமிலே காணப்படும், உணர்ச்சிக்கும் ஏதாவது ...ம்பந்தம் இருப்பதாகத் தெரிகிறதா!!

'நாம் இந்தியர்' என்ற உணர்ச்சி, பொய்யுரையின் ...து நிற்கிறது. எனவேதான், துளி அளவு பிரச்சினை ...னாலும், உண்மை உணர்ச்சி, பீறிட்டுக்கொண்டு ...ந்துவிடுகிறது.

தம்பி! திருவண்ணாமலையில் மூன்றாண்டுகளுக்கு ...ன்பே இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே, இந்தி ...ஆதிக்கம் எனும் ஆபத்து வரக்கூடும் என்பது ...ற்றிப் பேசப்பட்டது. இந்தி எதிர்ப்பு நாள் ...டத்தப்பட்டது; நாடெங்கும், கிளர்ச்சிக்கான ...ன்னேற்பாடுகள், செய்யலாயினர். ஆட்சிமொழி ...ற்றி கேர் குழு தந்த அறிக்கையில் டாக்டர் சுப்பராய ...னும், வங்கப் பேராசிரியர் ஒருவரும் ஒப்பம் எழுத ...றுத்து, எதிர்ப்புக் கருத்துகளைத் தெரிவித்திருந் ...னர்—தமிழக மக்களுக்கு இது, பெரியதோர் விழிப் ...புணர்ச்சியை ஊட்டிற்று.

டாக்டர் சுப்பராயன், தமிழர்—அறிமுகப்படுத்தத் ...தேவையில்லை—அமைச்சராகி இருக்கிறார் இப்போது —முன்பு ஆச்சாரியாரின் வலக்கரம் என்ற சிறப்புக்கு ...உரியவராக இருந்தவர். அவர், கேர் குழுவின் முடி...வைப் பலமாகத் தாக்கினார்—தக்க காரணங்களைக் ...காட்டி.

எங்கு சென்றாலும், எப்படி வாழ்ந்தாலும், எவ...ருடன் குலவினாலும், தமிழன் என்ற இன உணர்ச்சி அவரை விட்டு விடாது; எனவே அவர், மறுப்புரை ...எழுதியதிலே விந்தை இல்லை.

அதேவிதமான கருத்தினை, ஏறக்குறைய அதே ...சொற்களில், சுனிதிகுமார் சட்டர்ஜி எனும் வங்காளப் ...பேரறிவாளர் தெரிவித்திருந்தாரே, அது உள்ளபடி ...வியப்புக்குரியது, ஐயமில்லை.

சுனிதிகுமார் சட்டர்ஜி, மொழித்துறை வல்லுநர்; ...நாற்பது ஆண்டுகளாக அந்தத் துறையில் பணி ...யாற்றிப் பெரும்புகழ் ஈட்டியவர்.

மேற்கு வங்க மேல்சபைத் தலைவராகத் திகழ்ந்தவர்.

வர்தாவில் துவக்கப்பட்ட 'ராஷ்டிர-பாஷா பிரசார் சமிதி'யின் மேற்கு வங்கக் கிளைக்குத் தலைவர்; எனவே இந்திக்கு விரோதி அல்ல.

இந்தி மொழியில் நான்கு நூற்களை இயற்றியவர் —பரிசுகூடக் கிடைத்து—எனவே, இங்கு இந்திக்காக வாதாடும் பேர்வழிகள்போல, இந்தி தெரியாதவரல்ல —விற்பன்னர்.

அப்படிப்பட்ட அறிவாளி 'இந்தி வெறி' — 'இந்தி ஏகாதிபத்தியம்' என்றெல்லாம் கண்டித்து, எழுதினர்.

I cannot help feeling that the Report is simply trying to suggest certain programmes and lines of procedure from the centre without a close consideration, either of the general situation in India in the sphere of language or of future reactions and repurcussions among large sections of our people.

*

The entire out-look is that of the Hindi-speakers in the Indian union, who alone are to profit immediately and for a long time to come, if not forever,

*

I fear that in the entire report there is Very little evidence of an attempt to understand the feelings and the intelectual approach of the Non-Hindi speaking peoples for their own languages......

*

The attitude is far from democratic—it is just a case of imposition of one kind of mentality over the rest......

*

The recommendations will in my opinion bring about the immediate creation without intending to do so of Two classes of citizens in India—class I citizens with Hindi as their language obtaining an immense amount of special priveleges by Virtue of their language only.

*

I honestly feel that I am seeing an incipient 'Hindi Imperialisim'

*

After consulting the non-Hindi states the constitution of India is to be amended in its section on the official language of the Indian Union.

*

கேர் குழு, ஆட்சி மொழி குறித்து ஆய்ந்தறியத் தக்க முறைகளை மேற்கொள்ளவில்லை, என்பதற்கு, சாட்டர்ஜி காட்டுவதைவிட வேறென்ன காரணம் தேவை?

மொழி விஷயமாக இந்தியா முழுவதிலும் என்ன கருத்துப், பொதுவாக நிலவுகிறது என்பதைக் கண்டறியாமலும், பெரும்பாலான மக்களிடையே, என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்காமலும், மத்திய அரசு என்னென்ன வழி முறைகளைக் கையாளவேண்டும் என்று மட்டுமே, குழு அறிக்கை தயாரித்திருக்கிறது.

✽

அறிக்கையின் நோக்கம், இந்தி பேசும் மக்களுக்கு, உடனடியாகவும், நெடுங்காலத்துக்கும், ஒரு சமயம் என்றென்றும், இலாபம் கிடைத்திடக்கூடிய விதமாகவே அமைந்திருக்கிறது.

✽

இந்தி பேசாத மக்கள், தங்கள் மொழிபற்றிக் கருதுவது என்ன என்பதைக் கண்டறிய ஒரு முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படவில்லை, என்பதும், இந்தி பேசாத மக்களுடைய உள் உணர்ச்சி மதிக்கப்படவில்லை என்பதும், அறிக்கையில் தெரிகிறது.

✽

ஜனநாயகமுறை கையாளப்படவில்லை. ஒரு கருத்தினர் தமது கருத்தை மற்றவர்மீது திணிப்பது தான், இந்த முறை என்று தெரிகிறது.

✽

இந்த அறிக்கையின்படி காரியமாற்றினால், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் மேலோர் ஆகவும், மற்றவர்கள் இரண்டாந்தர மக்கள் ஆகவும் ஆகிவிடுவர்.

✽

இந்தி ஏகாதிபத்யம், நெளிவதைக் காண்கிறேன்.

✽

இந்திய அரசியல் சட்டத்தில் மொழிபற்றி இருக்கும், விதியை, இந்தி பேசாத மாநிலங்களுடன் கலந்து பேசி, திருத்தி அமைக்கவேண்டும்.

✽

தம்பி! டாக்டர் சுப்பராயன், இந்தக் கருத்துக்களை ஆதரித்ததுடன், இந்திபற்றி. பல்கலைக் கழக மாணவர்களின் கருத்தினை அறிந்திருக்கவேண்டும், என்றும், சுட்டிக் காட்டினார்.

இந்த கருத்துகளும், நாட்டிலே, இதற்குப் பரவலாகக் கிடைத்த ஆதரவும், நமக்கெல்லாம் மிகுந்த திருப்தியை உண்டாக்கின.

இந்திக்கு எதிர்ப்பு, எதிர்பாராத இடமிருந்தெல்லாம் வருகிறது, எனவே, வெறி குறையும், ஆதிக்க முயற்சி குலையும் என்று எண்ணம் பிறந்தது; செந்தேனாய் இனித்தது.

இம்மட்டோ! இந்தியைக் கட்டாய பாடமாக்கி, தமிழரை வம்புக்கு இழுத்து, தாளமுத்து—நடராசன் என்னும் இரு இளைஞர்களைப் பலிகொண்ட அடக்கு முறையை அவிழ்த்துவிட்ட, ஆச்சாரியாரே, கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, இந்தியைப் பலமாகத் தாக்கலானார்.

இந்தியை எதிர்த்து நானும் ஆச்சாரியாரும் ஒரே மேடையில் பேசிய அற்புதமே கண்டாயல்லவா!

வங்கம் சென்றுகூடப் பேசினார் ஆச்சாரியார்.

சம்பத்தும், வி. பி. இராமனும் வங்கம் சென்று மொழி மாநாட்டிலே பேசினர்.

இங்குள்ள இதழ்கள்கூட, இந்தி வெறியை கண்டித்தன.

எங்களுக்கு மட்டும் என்ன, தமிழ் உணர்ச் இல்லையா! நாங்கள் இந்தத் தமிழ் மண்ணிலே பிறக் வில்லையா!! என்று காங்கிரஸ் மந்திரிகளேகூடப் பே லாயினர். மகிழ்ச்சி நமக்கு, மயக்கம் வரும் அளவுக் போரிடாமலே வெற்றி கிடைத்துவிடும், என் நினைப்புத் தடித்தது.

இவைகளை எல்லாம்விட, இந்தி குறித்து பண்டித நேரு பாராளுமன்றத்தில் இருமுறை பே யது, நம்மைக் களிப்புக் கடலிற் கொண்டு சேர்த்தத் என்னலாம்; இனிப்புக்கூட்டிப், பெருந்தன்மைய காட்டிப், பெருந்தலைவர் என்ற கோலம் பூண்டா நேரு பண்டிதர்; நம்மை மகிழ்வித்தார். என்ன தெளிவு! எத்துணை கனிவு! தலைவரென்றால் இப்ப அல்லவா இருக்கவேண்டும்! மக்கள் குரலுக்கு எ வளவு மதிப்பளிக்கிறார். மாமன்னைகளும் புரிந் கொள்ளத்தக்க விளக்கம் தருகிறார்! அச்சம் அ றது! ஐயம் நீங்கிற்று! ஆணித்தரமாகப்பேசிவிட்டா இனி இந்தி வெறியர், பெட்டிப்பாம்பாவர்!—என்றெ லாம், நாடே புகழ்பாடிற்று, பண்டிதரின் பேருரை கேட்டு. சந்தைச் சதுக்கத்திலோ, சாவடித் திண்ணை யிலோ, அல்ல, தம்பி! பாராளுமன்றத்தில் பேசினா எந்த இடத்தில் பேசினால், இந்தத் துணைக்கண்ட மட்டுமல்ல, உலக நாடுகள் அனைத்திலும் கூர்ந் கவனிக்கப்படுமோ, அங்கு பேசினார்!!

Hindi would not be imposed against thei wishes on non-Hindi speaking people.

English would continue as an associate o additional language in the country for an inde finite period or as long as the Non-Hindi spea king people wanted it.

The decision as to how long it woul continue as an associate language should b left to the Non-Hindi speaking people and no to the Hindi-speaking people.

✽

Many people in the South objected to learn ing Hindi. They did so because of a fee -ling that it was being imposed on them

Therefore all talk of imposition must g (Hear' Hear') I shall go further and say that i they don't want to learn Hindi, let them n learn Hindi.

I believe in two things. There must be n imposition of Hindi. Secondly for an indefinit period—I do not know how long—Englis should continue as an associate or addition language, not because of certain facilities a all that but because I do not wish people in t Non-Hindi areas to feel that certain doors advances are closed to them,

So I would take (English) it as an alte native language so long as people require and the decision on that I would not leave t the Hindi-knowing people, but to the non-Hindi knowing people. (Cheers)

படித்துப் படித்து இன்புறலாம் என்று தோன் பண்டிதரின் பேருரை!

இந்தி பேசாத மக்கள்மீது அவர்களின் விருப்பத் துக்கு மாறாக இந்தி திணிக்கப்படமாட்டாது.

*

துணைமொழியாக, ஆங்கிலம், நீண்ட நெடுங்காலம்— அல்லது இந்தி பேசாத மக்கள் எவ்வளவு காலத்துக்கு இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதுவரையில், ஆங்கிலம் துணைமொழியாக இருக்கும்.

*

ஆங்கிலம் துணைமொழியாக எவ்வளவு காலம் இருக்க வேண்டும் என்பதை முடிவு கட்டும் உரிமை, இந்தி பேசும் மக்களிடம் அல்ல, இந்தி பேசாத மக்களிடமே விடப்படும்.

*

தெற்கே பலர், இந்தி கற்பதை மறுக்கிறார்கள்; தி திணிக்கப்படுகிறது, என்ற எண்ணத்தால்.

எனவே, திணிப்புப்பற்றிய பேச்சு ஒழியவேண்டும்.

*

நான் இன்னும் சொல்லுவேன்; அவர்கள் இந்தி படிக்க விரும்பாவிட்டால், படிக்கத் தேவையில்லை.

*

இரு விஷயங்களில் நான் நம்பிக்கைவைத்திருக்கிறேன். ஒன்று இந்தித் திணிப்பு கூடவேகூடாது. இரண்டாவதாக- காலம் குறிப்பிடமுடியாது-எவ்வளவு காலம் என்று எனக்கே கூறத் தெரியாது-ஆங்கிலம் துணைமொழியாகத் தொடர்ந்து இருந்தாகவேண்டும்; அதனால் சில வசதிகள் உள்ளன என் பனபோன்ற காரணங்களுக்காகக்கூட அல்ல; தங்கள் முன் னேற்றம் தடுக்கப்பட்டுவிடுவதாக இந்தி பேசாத மக்களுக்கு ஒரு உள் உணர்ச்சி ஏற்படக்கூடாது என்பது என்எண்ணம்.

*

எனவே, ஆங்கிலம், இந்திக்குப் பதிலாக, மாற்று ஆட்சிமொழியாக இருக்கவேண்டும்—எவ்வளவு காலத்துக்கு மக்கள் விரும்புகிறார்களோ அதுவரையில் ஆங்கிலம் இருக்க வேண்டும். இதற்கான முடிவு கூறும் உரிமையை இந்தி பேசும் மக்களிடம் நான் விடமாட்டேன்; இந்தி பேசாத மக்கள்தான் முடிவு எடுக்கவேண்டும்.

தம்பி! இவ்வளவு தெளிவாக இந்தத் துணைக்கண் த்தின் முதலமைச்சர், காங்கிரஸ் கட்சியின் ஈடு திர்ப்பில்லாத் தலைவர், உலகப் பெருந்தலைவர்களின் ரிசையிலே இடம்பெறத்தக்கவர் என்ற புகழ் ஈட்டிக் காண்டவர், பஞ்சசீல கர்த்தாவென்றும் பாண்டுங் மாநாட்டு வீரர் எனறும் கொண்டாடப்படுபவர், போர் வெறிகொண்ட இந்தக் கெட்ட உலகிலே, சமாதானம் லவப் பாடுபடும் சாந்த மூர்த்தி, என்று போற்றப் டுபவர் — பண்டிதர் — பேசினால் யாருக்குத்தான், ம்பிக்கை மேலிடாது.

இந்தி குறித்து இனிக் கவலையில்லை.

அச்சம் இல்லை; நீதி நிலைத்தது.

இந்தி வெறியரின் கொட்டம் அழிந்தது; ஆதிக் ம் ஏற்படாது.

இந்தி பேசாத மக்களின் உரிமை பாதுகாக்கப் ட்டுவிட்டது, பண்டித நேருவே இதற்கு உறுதி மொழி அளித்துவிட்டார்.

அவருடைய உறுதிமொழியை, மாஸ்கோவும் வாஷிங்டனும், பெர்லினும் இலண்டனும், பாரிசும் டோக்கியோவும், மதிக்கும்போது, நாம் மதிப்பளிக்கா திருப்பது, அறிவுடைமை யாகுமா!—என்றெல்லாம் தம்பி! நம் நெஞ்சம் எண்ணியதிலே, தவறு இல்லையே! நம்பினோம்!

அந்த நம்பிக்கையின் காரணமாகத்தான், திருவண்ணாமலையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்திய நாம், 1959 செப்டம்பர் திங்கள் நடத்திய பூவிருந்தவல்லி மாநாட்டில்,—ஒரு வாழ்த்துத் தீர்மானமே, நிறைவேற்றி னோம்.

"இந்தி ஏகாதிபத்தியத்தைப் புகுத்தி நிலைபெறச் செய்ய வடநாட்டுச் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் வஞ்சக முயற்சியை திராவிடப் பெருங்குடி மக்கள் தீவிரமாகவும் தொடர்ந்தும் அறவழி நின்று நடத்தி வரும் கிளர்ச்சியின் விளைவாக, வடநாட்டு இந்தி வெறியர்களின் போக்கைப் பண்டித நேருவே கண்டிக்கவும்; தடுத்து நிறுத்தவும்; முன் வரவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது, திராவிடரின் கிளர்ச்சி வெற்றிப்பாதை நோக்கிச் செல்கிறது என்பதையே எடுத் துக் காட்டுவதாக இந்த மாநாடு கருதுவதுடன், பண்டித நேருவின் போக்கிலேயே ஒரு மாற்றத்தையும், இந்தி வெறி யர்களின் கொட்டத்துக்கு ஒரு பலமான அடி கிடைத்தது போன்ற நிலைமையையும் ஏற்படச் செய்ய வீரமும் **தியாகமும் நிறைந்த கிளர்ச்சியில் ஈடு பட்ட திராவிடப் பெருங்குடி மக்களுக்கு இம் மாநாடு வணக்கத்தையும் வாழ்த் துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது."**

நமக்கு மட்டுமல்ல, இந்தி ஏகாதிபத்தியத்தை வெறுக்கும் பலருக்கும் பண்டிதரின் பேச்சு, பாகாக இருந்தது. இனி இந்தித் திணிப்புப்பற்றிய பயம் இல்லை என்று பலரும் கூறினர்—களித்தனர்.

வாழ்த்துத் தீர்மானம் நிறைவேற்றியபோது கூடத் தம்பி! நமக்கு ஐயப்பாடு அறவே நீங்கிவிட வில்லை.

பண்டிதரின் போக்கு மாறிவிடுமோ? பேச்சை ஒருநாள் மறுத்துவிடுவாரோ? பேசிமட்டும் என்ன பலன்? சட்டம் மிரட்டியபடி இருக்கிறதே! எந்த நேரத் தில் இந்தி வந்திடுமோ, கொட்டிட!—என்ற அச்சம் கலந்த ஐயப்பாடு எழுந்தது. எனவேதான், வாழ்த் துரைத்ததுடன், வேறொன்றினையும் தீர்மானம் அளித்தது.

"1965க்குப் பிறகு இந்தி மொழியே அகில இந்திய ஆட்சி மொழியாகி, ஆங்கிலம் அறவே அகற்றப்படும் என்ற நெருக்கடியைப் பண்டித நேருவின் வாக்குறுதி தளர்த்தி யிருப்பது கண்டு இம்மாநாடு மகிழ்கின்றது என்றாலும், பேச்சளவோடு நின்றுவிடாமல், பண்டித நேரு, தமது வாக்குறுதியைச் சட்ட பூர்வமான நடவடிக்கையை எடுத் துக்கொள்வதன் மூலம் நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்திக் கூறுகிறது."

எந்த இந்திப் பிரச்சினை எரிச்சலையும் அருவருப் பையும் மூட்டி வந்ததோ, எந்தப் பிரச்சினை எதேச் சாதிகாரத்துக்கு வழி கோலுவதாகும் என்ற நியாய மான அச்சம், திராவிடப் பெருங்குடி மக்களின் உள் ளத்தைக் குடைந்து வந்ததோ, அந்தப் பிரச்சினைக்கு மிகச் சாதாரண அரசியல்வாதிபோல அல்ல, மக்க ளின் மனதினை அறிந்தும் மதித்தும் நடந்திடும் மாபெருந் தலைவர் என்ற முறையிலே, தக்கதோர் தீர்வுகாண முன்வந்த, பண்டித நேரு, தமது வாக்

குறுதிக்குச் சுவையும் பயனும் ஏற்படத்தக்க செயலை மேற்கொண்டாரா? இல்லை!

இந்தி பேசாத மக்களின் கருத்தறிய ஏதேனும் முயற்சி எடுத்துக்கொண்டாரா? இல்லை.

இந்தி பேசாத மக்களின் கருத்தறிய என்ன வழி என்பதுவது கலந்துபேசினாரா? இல்லை.

இந்தி பேசாத மக்கள் இப்போது இந்தியை ஏற்றுக்கொண்டுவிட்டனரா? இல்லை.

இந்தி குறித்து முடிவுகட்டாமல், சும்மாவிடப் பட்டதா? இல்லை.

நேரு பேசினார் நேசம் சொட்டச் சொட்ட; குடி அரசுத்தலைவர், தமது ஆணையின்மூலம் தமிழரின் வாழ்வை, பதைக்கப்பதைக்க வெட்டுகிறார், 1965-க்குப்பிறகு, இந்திதான், ஆட்சி மொழி, அறிவீர், என்று அறைகிறார்.

இந்திபேசாத மக்களைக்கேட்பேன்-இந்தி பேசாத மக்களைத்தான் கேட்பேன்; இந்தி பேசும் மக்களைக் கேட்கத் தேவையில்லை--கேட்கப்போவதில்லை--என்று பண்டிதர் கூறினார் — அவருடைய சொல்லுக்குக் கிடைத்த மதிப்பு, வாக்குறுதிக்குக் கிடைத்த மரியாதை என்ன? பாபு இராஜேந்திரபிரசாத், பிடிசாபம்! என்று கூறிவிட்டார்! நேருவின் முகத்தில் கரிபூசிவிட்டார்! துடைத்துக்கொண்டுவிடுவோம் என்று, பண்டிதர் எண்ணிக்கொள்ளக்கூடும். ஏனெனில் அது அவருக்கு மிகச் சாதாரணமான, 'அதிகாரவரம்பு' பற்றிய பிரச்சினையாக இருக்கலாம். நமக்கோ? உயிர்ப் பிரச்சினையாயிற்றே!

அவ்வப்பொழுது இருக்கும் ஆற்றலை மட்டுமல்ல, அவனியிலுள்ள அறவோர் இன்றுமட்டுமல்ல, பிறகோர் நாளும், என்ன கூறுவர் என்பதற்கு அஞ்சி ஆட்சி நடத்துவதே அறவழி.

வலிவு கரத்திலே சிக்கிவிட்டதாலேயே வழிப்பறி, நடத்திவிடலாம், சிலகாலம், சிலரிடம். ஆனால், அவனை வீரனென்று, எவரும் கூறார். வெற்றியும் இறுதிவரை இருந்துவிடாது.

பண்டித நேரு இந்த அறிவினைப் பெற்றவர், எனவேதான், பண்புடன் பேசுகிறார்; அறநெறி நிற்கிறார், என்றெண்ணி அகமிக மகிழ்ந்தோம்.

ஆனால், பாராளுமன்றத்தில், பலருடைய கைதட்டுதலைப பெற்ற நிலையில், தாம் பேசிய பேச்சினைத் துச்சமென்று கருதும் தன்மையில், கொடுத்த வாக்குறுதியைக் குப்பைக் கூடைக்குத் தூக்கி எறியும் விதத்தில், குடி அரசுத் தலைவர், இந்தி பேசாத மக்களின் கருத்துப்பற்றி ஏதும் கூறாமல், ஆணை பிறப்பிக்கிறார், இந்திதான் 'ஆட்சிமொழி 1965ல் என்று, நேரு பண்டிதர், வாயடைத்துக் கிடக்கிறார். வேதனையும் வெட்கமும் விலாவைக் குத்தவில்லையா?

பூ! இது என்ன பிரமாதம்! பாண்டுங் மாநாட்டில், 'பாய்—பாய்'! என்று இருந்தார் சூ—இன்—லாய்; இப்போது பற்களை நற நறவென்று கடித்துக் காட்டுகிறார்—மாலை மாலையாகப் போட்டார் என் கழுத்தில்; இப்போது பல ஆயிரக்கணக்கான மைல்களை கைப்பற்றிக்கொண்டார்! வெட்கம்தான்! வேதனைதான்!! ஏதோ டில்லிவரை வராமலிருக்கிறாரே, என்று எண்ணிக்கொள்ளவில்லையா! அதுபோல் குடி அரசுத் தலைவர் என் தலையில் குட்டுவதுபோலத்தான் காரியம் செய்துவிட்டார்—என்ன செய்யலாம்! இத்துட விட்டால் போதும்! இறங்கு கீழே!! என்று கூறின என்ன செய்வது!!—என்ற முறையிலே எண்ணி கூட, நேரு, சமாதானம் தேடிக்கொள்ளலாம்—சாந் பெறலாம். ஆனால் நாம்? நமது கதி என்ன ஆவது

பண்டித நேரு, கொதிக்கும் உள்ளத்துக்குச் சி தளவு சாந்தி தேடித் தருகிற முறையில், தேன்மொழ பேசிவிட்டு, இந்தித் திணிப்பு நடைபெறும்போது நம்மை மயக்கத்திலிருந்திடச் செய்துவிட்டால் நிலைமை மோசமாகிவிடுமே என்ற கவலை, நமக்கு, அந் நேரத்திலும் இருந்தது. வாழ்த்தினோம்! வலியுறு தினோம்! என்ற அளவோடு நின்றோமில்லை.

> "எந்த நேரத்திலும் தீவிரமான அறப்போர் நடத் வேண்டிய நிலைமை ஏற்படக்கூடும் என்று இம் மாநாடு கரு வதால் ஒவ்வொரு கிளைக் கழகமும் ஒவ்வொரு சிற்றூரி இந்தி ஆதிக்க ஒழிப்பு அறப்போரில் ஈடுபட உறுதிகொண் வர்களின் பட்டியலைத் தயாரித்து, தலைமைக் கழகத்திற் அனுப்பித்தரவேண்டும்."

என்ற தீர்மானத்தையும் பூவிருந்தவல்லி மாநாட்டி நிறைவேற்றியிருக்கிறோம்.

1957ல், திருவண்ணாமலையில் நடைபெற்ற இந் எதிர்ப்பு மாநாட்டிலே, அறப்போர் வீரர்களின் பட் யல் தயாராகவேண்டும் என்று கழகம் கட்ட யிட்டது.

1959 செப்டம்பரில் பூவிருந்தவல்லி மாநாட்டி யும் 'பட்டியல்' தயாராகட்டும் என்று கழகம் நின படுத்திற்று.

இரண்டு மாநாடுகளுக்கும் இடையே இருந் ஆண்டுகளிலே எத்தனை எத்தனையோ, மாற்றங்க —எனினும், நமது கழகம், மயங்கிவிடவில்லை, மருண் விடவில்லை, அயர்ந்து போய்விடவில்லை.

எந்தச் சமயத்திலும், அறப்போர் அணிவகுப் களுக்கான அழைப்பு அனுப்பவேண்டிய நிலை பிற கும், என்று விழிப்புடனேயே, கழகம் இருந்து வ திருக்கிறது.

இப்போது, நேரு, தன் வாக்குறுதியைக் கா பாற்ற வேண்டியது, தமது கடமை என்பதை மறந் விட்டார்; நேருவின் பேச்சுக்கு உரிய மதிப்பளிப்ப தான் முறை என்பதைக் குடிஅரசுத் தலைவர் மறந் விட்டார், இந்தி அரசோச்சும் என்று அறிவிக்கு ஆணை பிறப்பித்துவிட்டார்; இந்தி பேசாத ம ளுடைய கருத்தினை அறிந்திடத் துளியும் முயற் எடுக்கப்படவில்லை. சட்டம் திருத்தப்படவில் என்ன செய்வது? ஏக்கம், பலன் அளிக்காது! துக்க துளைத்திட இடமளித்து ஒன்றும் ஆகப்போவதில் துணிவுடன், மனத் தூய்மையுடன், கடமை உணர் யுடன், இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்தொழி தன்றி வேறு வேலை தேவை இல்லை என்று கூற கட்டம் காண்கிறோம்!

அதென்ன அண்ணா! கட்டம் காண்கிறோ என்று கூறுகிறாய்; கட்டம் வந்து சேர்ந்துள்ளோ என்று கூறு, மேலால் என்ன செய்வது என்பன யும் சொல்லு; என்ன வகையான தியாகமும் செய் தயாராக உள்ள இலட்சக்கணக்கான தம்பிமார்க உள்ளனர் என்பதை மறவாதே!—என்று உன் வி பேசும் வீரத்தை நான் மறந்தேனில்லை! மகிழ்கிறே பெருமை கொள்கிறேன்.

இந்தி பேசாத மக்களுடைய கருத்தை அறிந்து கொள்ளாமல், இந்தியை ஆட்சிமொழி ஆக்குவது, கூடாத செயல். அதைத் தடுக்கத்தான், நமக்கு ஆவி; தாசராகித் தவித்திட அல்ல!!

திரௌபதை துகில் கட்டுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கவேண்டியவன் துச்சாதனன் என்றால், திரௌபதைக்கு என்றையத் தினம் துணி கிடைக்கும்?

திரௌபதைக்கு எந்தத் துணி தேவை என்பதைத் தருமன் கூற உரிமைபெற்றால், ஏதோ ஒரு நாட்டுச் சேலையாவது கிடைக்கக்கூடும்,

அருச்சனனுக்கு அந்த உரிமை இருப்பின் ஒரு அலங்காரச் சேலை வாங்கித்தருவான். துரியோதனனுக்கோ துச்சாதனனுக்கோ அந்த உரிமை அளிக்கப்பட்டால், எந்தச் சேலை கிடைக்கும்? இருக்கிற சேலையையே உருவியவர்கள் அல்லவா அவர்கள்!

அதுபோன்று இருக்கிறது, அரசியல் ஆதிக்கத்தைப் பறித்துக்கொண்டுள்ள, வடவர், இந்தி பேசும் மக்கள், பார்த்து, நமக்கு எந்த மொழி ஆட்சிமொழி என்று முடிவுகட்டுவது.

வைதிகக் கலியாணம் போலல்லவா, அவர்களின் நடவடிக்கை இருக்கிறது. பெண்ணிடத்திலே ஒரு வார்த்தைகூடக் கேட்காமல், விடியற்காலை கணவனைக் கொண்டுவந்து உட்காரவைக்கும் நேரத்தில், அவனுக்கு ஒரு கால் நொண்டியாக இருந்து, சாய்ந்தாடி வந்தால், பார்த்து, மணப்பெண் கண் கலங்கி, "என்ன? ஒரு கால் நொண்டி போல் இருக்கிறதே?" என்று தோழியிடம் கேட்டால், 'இல்லை! வாழைப்பழத் தோலை மிதித்தார் — வழுக்கிக் கீழே விழுந்தார்—வேறொன்றுமில்லை" என்று பொய்பேசி, கழுத்திலே தாலி கட்டிய கதை போலல்லவா இருக்கிறது.

வடநாட்டு இந்தி வெறியர்கள் எந்த அளவுக்கும் துணிவார்கள் என்பதை விளக்கிட, இந்தப் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளில், அடுக்கடுக்காகப் பல நிகழ்ச்சிகளைக் காட்டலாம்; காட்டிக்கொண்டுதானே வருகிறோம்; கட்டுண்டு கிடக்காதவர்கள், கண்ணியத்தை இழந்திடாதிருப்பவர்கள், உணருகிறார்கள், உள்ளம் வெதும்பிக் கிடக்கிறார்கள். சென்ற கிழமை வடவர், காங்கிரசுத்தலைவர் சஞ்சீவிரெட்டியாரிடமே இந்தி வெறியைக் காட்டினரே!!

பண்டித நேரு, பாரதத் தலைவரானார்—எதற்கு?—நமது இந்தி ஆதிபத்தியத்தை நிலைநாட்ட! அதற்கு அவர் கருவியாக இருக்கவேண்டுமேயன்றி, மற்றவரின் உரிமை—மற்றவர் கருத்தறிதல்—போன்றவைகளிலே ஈடுபட அல்ல!!—என்று, இந்தி வெறியர்கள் கருதுகிறார்கள்.

பண்டித நேருவுக்குப் பலமளித்திருப்பதே, இதற்காகத்தான்!—என்று எண்ணுகிறார்கள்.

இந்தக் காரியத்தை நிறைவேற்ற, நேரு, தனக்கு அளிக்கப்பட்டுள்ள இடம், வலிவு, ஆகியவற்றைப் பயன்படுத்தத் தவறினால், அவரை வீழ்த்தவும், அவர்கள் தயங்கமாட்டார்கள்,

இந்துமத ஆதிக்கத்துக்கு முழுக்க முழுக்கப் பயன்படுவார் மகாத்மா என்று நம்பி, அவரிடம் 'பயபக்தி விசுவாசம்' காட்டி வந்த இந்துமத வெறியர்கள், காந்தியார் 'ராமும்—ரஹீமும்' ஒன்றேதான் என்று கூறுமளவு பெருங்குணம் காட்டியதும், இனி இவர் நமக்காக இருக்கமாட்டார்! இவரால் நமது ஆதிக்கத்துக்கே ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடும்!—என்று கூறி, வெறிகொண்டு, அவரை இழித்தும் பழித்தும், பேசினார்களே!

தம்பி! அப்படிப்பட்ட வெறிபிடித்தலைந்த கோட்சே எனும் பார்ப்பனன், உலக உத்தமர் காந்தியாரைச் சுட்டே கொன்றுவிட்டானே! அதைவிட, இழிதன்மைக்கும் கொடுமைக்கும் வேறென்ன எடுத்துக் காட்டுவேண்டும்.

சோவியத் தலைவரும் அமெரிக்க அதிபரும், எகிப்துத் தலைவரும் இன்னபிறரும், காந்தியாரின் 'சமாதி'யில் மலர்தூவி, அஞ்சலி செய்கிறார்களே, தம்பி! அப்போது, அவர்கள், பாரதத்தின் விடுதலைக்காகக், காந்தியார் நடத்திய ஒத்துழையாமை, உப்புச் சத்தியாக்கிரகம், தண்டி யாத்திரை, போன்றவைகள் பற்றியா, எண்ணிக்கொண்டு நிற்கிறார்கள்! நிச்சயமாக, அந்த எண்ணம் எழாது!!

எவ்வளவு இழிதன்மை நிறைந்த கொடியவர்கள் இந்த நாட்டிலே! நாடு மீள வழி காட்டினார்—அவரை அல்லவா, மதவெறி காரணமாகச் சுட்டுக்கொன்றனர்! மதம், வெறி அளவாகி, யாரைக் கண்கண்ட தெய்வம் என்று கோடிக்கணக்கானவர்கள் கொண்டாடினரோ, அவரையே அல்லவா, மத ஆதிக்கத்துக்கு ஆபத்து ஏற்படுத்துகிறார் என்பதற்காக, கொலை செய்தனர்! என்று எண்ணுகிறார்கள், தம்பி! எண்ணியதும், ஆயிரத்தெட்டு அணைக்கட்டுகளைக் காட்டினாலும், நூற்றுக்கணக்கானபுத்தம்புதுத்தொழிலிடங்களைக் காட்டினாலும், இவைகள் நல்ல வளர்ச்சிக்கான அறிகுறிகள், உண்மை; நல்ல நாடு என்பதைக் காட்டும் சான்றுகள்; ஆனால்......!!—என்று எண்ணிப் பெருமூச்செறிகிறார்கள்—கண் கசிகிறது—ராஜ கட்டத்தை நினைக்கிறார்கள்—காடு அல்லவோ இது! என்று எண்ணிக் கடுங்கோபம் கொள்கிறார்கள்.

காந்தியாருக்குக் கிடைத்தது. மூன்று குண்டுகள்—மார்பில்! ஆதிக்கம் பெற அலைவோர், அபலை எனினும் அருளாளன் எனினும், வழிகாட்டி எனினும் வாழ்வளித்தவன் எனினும், யாராக இருப்பினும், தமது ஆதிக்கத்தை எதிர்த்து ஒழிப்பான என்று, துளி சந்தேகம் தோன்றினாலும், ஈவு இரக்கம் காட்டாமல், தொலைத்துவிடுவார்கள்.

நேரு பண்டிதர், இந்த உண்மையை உணராமலிருக்க முடியாது! இந்தி ஆதிக்கக்காரர்களைத் தீவிரமாக எதிர்த்து நின்றிட, அறம் அவரை அழைக்கிறது, எனினும் அச்சம் அவரைத் தடுத்திடவும் செய்கிறது.

எனவேதான், வீரதீரமாக இந்தித் திணிப்பு அறவே கூடாது என்று பேசிய, ஆற்றல் நிறை தலைவன், பேச்சைத் தொடர்ந்து, செயலாற்ற முன்வரவில்லை. எந்தச் சமயம் பாய்வார்களோ, பழிக்கஞ்சாப் பாதகர்கள், என்று பயப்படுகிறார் என்றே தோன்றுகிறது.

சம்பத்தைக் கேட்டேன், "ஆமாம்! பண்டித நேரு இவ்வளவு வெளிப்படையாக, இந்தி வெறியைக் கண்டித்துப் பேசினாரே, இந்தி ஆதிக்கக்காரர்கள், என்ன கூறினார்கள், அதுபற்றி" என்று. "அதை ஏனண்ணா!

கேட்கிறீர்கள்! பாராளுமன்ற ஓய்விடத்தில் அமர்ந்து, அவர்கள், நேருவை, நாக்கில் நரம்பின்றி ஏசிக்கொண்டிருந்ததையே, கேட்டேன்'' என்று கூறினன்.

"வீராவேசப் பேச்சு''

"பேச்சுத்தானே! பேசட்டும்!''

"வீராவேசப் பேச்சுக்கூடப் பேசாமல், வேறு என்ன செய்வார், வீரர்!''

"யாரிட்ட போதனையோ, இப்படிப்பேசினர்''

"எதிலாவது அவருக்கு விருப்பம் ஏற்பட்டால், அது போதை அளவுக்குப் போவது தானே, வாடிக்கை''

பேசட்டும்—ஆனல் சட்டத்தைத் தெரிந்தல்லவா பேசவேண்டும்''

"சட்டம்தானே! நான் இட்டது சட்டம், என்கிருர்''

"சொல்வார்! சொல்வார்! நாம் சொரணையற்றுக் கிடந்தால்.''

தம்பி! இப்படியும், இதனைவிடக் கடுமையாகவும், அன்றே இந்தி வெறியர்கள், நேருவின் பேச்சைக் கேட்டு, குமுறிக் குளறிக் கொட்டினர்களாம்!!

இந்தவிதமாக ஆய்ந்தறிய நமது மாநில அமைச்சர்களுக்கு நேரமும் இல்லை—பழக்கமும் ஏற்படவில்லை. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம், ஒன்றே ஒன்று—நாங்கள் 150! நீங்கள் 15!! எங்கள் பக்கம் பஸ் முதலாளிகள், உங்கள் கட்சியில், டிரைவர் கண்டக்டர்! எங்கள் பக்கம் மிட்டா மிராசு! உங்கள் பக்கம் ஏர் கலப்பை! இதுதான்!!

இந்தியா?—படியேன்! என்ன கஷ்டம்?—என்று ஒவ்வொரு அமைச்சரும், ஒன்பது மொழி படித்துத் தேறிய வித்தகர்போலப் பேசிவிட்டு வருகிருர்கள்.

இப்படி இப்படி நேரு பேசினர் — குடிஅரசுத் தலைவரின் ஆணை இதற்கு மாருக, முரணுக, இருக்கிறது — அதனை எதிர்த்துத்தான், தி. மு. கழகம் அறப்போர் நடாத்தப்போகிறது என்று எவரேனும் கூறினல், எல்லாமறிந்தவர் இருக்கிருரே, இந்த நாட்டு முதலமைச்சர், அவர், இளிக்கிருராம், செய்யட்டுமே! —என்றுகூறி. என்ன துணிவினல்? போலீஸ் இருக்கிறது, ஏவிச், செம்மையாக அடிக்கச் சொல்லலாம், என்ற துணிவு! அந்தப் போலீஸ் துறையினருக்கு மட்டுமென்ன? இந்திமொழி வந்து, ஆலாத்தி எடுக்கப் போகிறதோ!!

"பெயர்?''

"பாரததாசன் என்கிற பாண்டுரங்கம்''

"எதற்காக, வந்தீர்?''

"தங்களைப் பேட்டிகண்டு மனு கொடுக்க''

"மனுவா?''

"ஆமாம்! நான், சப்—இன்ஸ்பெக்டராக, நீண்டகாலமாக இருந்து வருகிறேன். இப்போது மேல் உத்தியோகம் பார்க்க விரும்புகிறேன்''

"உம்! மேல் உத்தியோகமா? சரி! தகுதி; கூறும்''

"எட்டு மாவட்டங்களிலே கொட்டமடித்து கொண்டிருந்த, கொலைகாரக் கோபாலசாமியை பிடித்தது, நான்தான்!''

"அப்படியா? பிறகு...?''

"சூதாட்டமடம் நடத்திய சுப்பண்ணு கோடியை சிவராத்திரி அன்று, சுடுகாட்டு மண்டபத்திலே, சுற்றிவளைத்துப் பிடித்தது, நான்தா காதைப் பாருங்கள்! அந்தக் காலி, கடித்து துண்டாக்கிவிட்டான்''

"சரி! சரி! வேறே?''

"கடமை தவருதவன். ஒரு கருப்புப்புள்ளியும் இடையாது''

"இது கிடக்கட்டும். மேல்உத்யோகம் வேண்டும் என்கிருயே! தகுதிவேண்டுமே, அதற் இந்தி தெரியுமா?''

"இந்தி மொழியா......''

"என்னய்யா இழுத்துப்பேசுகிறீர்! இ இந்தியாவின் ஆட்சிமொழி! அதுவேதெரியா உனக்கு, தூத்தூ தூ! இந்திமொழி தெரிய ஆளுக்கு, மேல் உத்யோகமா? இந்த உத் கமே, இருக்கப்படாதே! திருடனைப் பிடித்தே சூதாடியைப்பிடித்தேன், என்று மளமளவென் வீரப்பிரதாபத்தை எல்லாம் கொட்டிக் கா ஞயே! இந்தி தெரியாத ஆள், இதெல்ல தெரிந்து என்ன பலன்? போ! போ! போய், இ யில் பரீட்சை எழுது! மார்க்கு வாங்கு! அந் தகுதிபெற்ற பிறகு, வா! போ! போ!!''

*

தம்பி! நாம், தடுத்து நிறுத்தாவிட்டால், இ ஆதிக்கம் ஏற்பட்டுவிடும்; ஏற்பட்டுவிட்டால் போ சுக்கும் இதே கதிதான்! அவர்கள்தானே அடிக் போகிருர்கள்! பரவாயில்லை! தாங்கிக் கொள்வே தம்பி! நம் இனத்தின்மீது (போலீசில் உள்ளவர்க யும் சேர்த்துத்தான்) இந்தி ஆதிக்கம் செலுத்த இறது; அந்தத் தாக்குதலைவிட, போலீஸ் கொண்டு தாக்குவது கொடுமையானதல்ல! தடி லைப் புண்ணுக்கும், உயிரைக் குடிக்கும்; இந்தி மனதைப் புண்ணுக்கும், மரபினை அழித்திடும்!

இதைக் கண்டதால் ஏற்பட்ட மனக் குமு தான், தம்பி! ஏதாவது வம்பு வல்லடி வேண் வேண்டும் என்று அலையும் பழக்கமற்ற, தி. மு. க கத்தை, போராட்டம் நடத்தியே தீரவேண்டும் என் நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது.

அறப்போரில் ஈடுபட்டு, அடக்குமுறையால் குருதி கொட்டப்பட்டால், அந்தக் குருதி கலந்த இருக்கிறதே, தம்பி! அதைவிடப் புனிதப்பொரு வேறு இல்லை.

அண்ணன்,

அண்ணாதுரை




வேழநாடு வந்து சேர்ந்த கார்க்கோடன் தான் கொண்டுவந்த சேதியை மன்னனிடம் பக்குவமாய்க் கலந்தான். வஞ்சகனின் நாவன்மைக்கு மன்னன இரையானன். தேன்மொழியின் திருமணத்தை முடித்திட முடிவுகட்டினன். தன் இசைவைத் தெரிவித்தான் வேந்தன். தேன்மொழியின் இசைவு பெறவேண்டுமென்று மன்னன் விரும்பினன். ஆனல் கார்க்கோடன் அதனல் ஏதாவது கோளாறு நேருமோ என்று அஞ்சி, "வேந்தே! வயலைக்கேட்டு வாய்க்கால் வெட்டுவதென்றல் விவசாயம் எப்போது நடைபெறுவது? பெண்களைக் கேட்டுக் காரியங்கள் செய்வதென்றல் நமக்கு இந்த ஆயுள்போதாது. நல்லதையும் கெட்டதையும ஆண்களால்தான் தீர்மானிக்கமுடியும். தாங்கள் பார்த்துச் சொல்லிய பிறகு முடியாதென்று இளவரசியார் சொல்லிவிடுவார்களா? தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்ற சாதாரண முதுமொழியை இளவரசியார் படித்திருப்பார்களே!......இளவரசி தங்கள் சொல்மீறமாட்டார்கள் என்றெண்ணுகின்றேன" என்று சொல்லி மன்னன் மனதைக் கலைத்தான்.

"தேன்மொழி என் சொல் தட்டமாட்டாள்" என்றன் வேந்தன்.

"நல்லதாயிற்று. தங்கட்குத் தடை இல்லாவிடில் திருமணத்திற்கு நாள் நிச்சயிக்கலாமென்றிருக்கின்றேன்"

"ஹூம்......அவ்வளவு அவசரமாகவா?"

"இதில் அவசரம் என்ன இருக்கிறது; நாள் தள்ளுவதால் என்ன இலாபம்? நல்ல காரியங்களைத் தள்ளிப் போடுவது நல்லதாகாது!"

வெற்றிபெற்றன் கார்க்கோடன். அரண்மனைப் புரோகிதர் அழைக்கப்பட்டார். திருமணத்திற்கு நாள் தேடினர்கள். கார்க்கோடனின்கண் சாடையைப் புரோகிதர் புரிந்து கொண்டார்.

**ப. உ. சண்முகம்**

"அடுத்த ஐந்தாவது நாள் ஏற்ற நாள்" என்றர் புரோகிதர்.

"அவ்வளவு நெருக்கத்திலா?" என்றன வேந்தன்.

"இருந்தால் என்ன?" என்றன் கார்க்கோடன்.

"அரண்மனையில் திருமணம் என்றல் எவ்வளவு ஏற்பாடுகள் செய்யவேண்டும் ... சாமான்யமா"

"தங்களை நான் புரிந்து கொண்டேன, கடந்த ஓராண்டுக் காலமாக தங்களுக்கு இதுதான் வேலை, அரண்மனையைப் பொறுத்தமட்டில் எல்லா ஏற்பாடுகளையும் முடித்துவிட்டிருக்கிறேன. தங்கள் சம்மதத்தையும் நாளையும் அறிந்து அழைப்புகள் அனுப்ப வேண்டியதுதான் பாக்கி. எங்கள் நாட்டைப் பொறுத்தமட்டில் எந்தக் குறையும் நிகழாது. வேண்டுமென்றல் தங்கள் நாட்டில் மணமக்களை வரவேற்கும்போது உங்கள் பிரியப்படி செய்யுங்கள். எனவே நாளைத்தள்ளாதீர்கள்."

"நாம் நாள் நிச்சயித்துவிட்டால், தங்கள் மன்னர் ஒப்புவாரா"

"அந்தக் கவலையே தங்கட்கு வேண்டாம். என் சொல்லுக்கு மறுமொழியே இருக்காது. எங்கள் மன்னர் இததிருமணத்தை விரைவில் நடத்திட விரும்புகிறர். திருமணம்செய்து நாட்டை இளவரசரிடம் ஒப்படைக்கப் பெரிதும் விரும்புகிறர். எனவேதான்..."

"தாங்கள் இவ்வளவு தூரம் சொல்லும்போது நான் ஏன் மறுக்கவேண்டும்?"

அடுத்த ஐந்தாம் நாள் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. நான்காம் நாள் வேழ நாட்டைவிட்டு அன்று மாலை வேங்கி நாடு மணப்பெண் வருவதென்ற தீர்மானத்தோடு புறப்பட்டான் கார்க்கோடன்.



கார்க்கோடன் தான் கொண்டு வந்த வெற்றிச் சேதியை ஆலகாலனிடம் சொல்லிப் பாராட்டுதல் பெற்றான்.

கார்க்கோடன் சென்றதும் தேன்மொழியிடம் ஏற்பாட்டைச் சொல்வதற்காக விரைந்தான். நடைபெற்றதை மெள்ளச் சொன்னான். மகிழ்ச்சி எதிர்பார்த்தான். மருட்சி கண்டான்.

"ஏனம்மா ஒருமாதிரியாக இருக்கிறாய்?"

"என்னைக் கேட்காமல் ஏன் அப்பா சம்மதம் தெரிவித்தீர்கள்?"

"ஏன்? எனக்கு அவ்வளவு உரிமைகூட இல்லையா?"

"உங்கள் உரிமைப் பிரச்சினையை விட, இதில் என் பிரச்சினைதானே அப்பா அதிகம் அடங்கியிருக்கிறது."

"தேன்மொழி! நீ என்னம்மா சொல்கிறாய்?"

"இந்தத் திருமணம் எனக்குப் பிடிக்கவில்லை அப்பா. வேண்டாம். நிறுத்திவிடுங்கள்".

"நிறுத்துவதா!...நாள் குறித்துவிட்டேன்...இப்போது போய் நிறுத்துவதா? விளையாடாதே அம்மா; உன் வாழ்வைக் குலைக்க நான் ஒருநாளும் முயற்சிக்கமாட்டேன். உன் நல் வாழ்விற்காகத்தான் இந்த ஏற்பாடு......தைரியமாக இரு" என்று சொல்லிவிட்டுப்போய்விட்டான் மன்னன்.

நீரினின்றும் எடுத்து எறியப்பட்ட மீனானாள் தேன்மொழி. தன் எதிர்கால வாழ்வைக் குலைக்கக் கிளம்பும் புயலின் அறிகுறிகள் கண்டாள். அசையாத சிலையானாள். கரை உடைந்த குளம்போல் பசுமையவள் குவளைமலர் விழிகள் ஆயின. பொங்கும் கண்ணீரைத் தடுக்கும் சக்தி இழந்துவிட்டாள். முறிந்த மரம்போல் வீழ்ந்தாள் மஞ்சத்தின்மீது. கதறினாள்...... குழந்தைபோல் கதறினாள். தேற்ற வந்த தோழிகளை விரட்டிவிட்டுக் கதவைத் தாளிடுத் தனியே கிடந்தழுதாள். தன் காதலன் வரும்வரை அழுதாள்.

இரவு நடுநிசியிருக்கும். வந்தான் அதிகமான்! தேன்மொழியின் தேன் ஊறும் அதரங்களைச் சுவைக்க வந்தான். ஆனால் வழக்கத்திற்கு மாறாகத் தன்னை வரவேற்காது படுத்திருக்கும் தேன்மொழியின் அருகே சென்றான்.

அழுது அழுது வீங்கிப்போயிருக்கும் அவள் முகம் கண்டான் அதிகமான். காரணம் கேட்டறிந்தான். அதிர்ச்சியுற்றான். மூச்சே நின்றுவிடுவதுபோல் உணர்ச்சி பெற்றான். உலாவினான். பெருமூச்சு விட்டவாறே உலாவினான். கடைசியாகத் தேன்மொழி துணிவு பெற்றாள்.

"தங்களைக் கேட்கவேண்டுமென்று நெடுநாளாக ஆவல்...... தாங்கள் யார்?"

இந்தக் கேள்வி கேட்டதும் அதிகமான் அதிர்ச்சியுற்றான். சமாளித்துச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "நானா?...... வேழநாட்டு இளவரசியின் காதலன்" என்றான்.

"கேலியிருக்கட்டும். தாங்கள் யார்? சொல்லுங்கள்"

'என்னைப்பற்றிய விபரம் பின்னால் சொல்கிறேன்''



"இல்லை... இப்போதே சொ[...]லுங்கள்"

"ஏன்?"

"தங்களைப்பற்றிய விபரம் தெ[...]தால் மன்னரிடம் சொல்லி நா[...] தங்களைத்தான் மணப்பேனென்[...] வாதாடலாம்"

'மன்னரின் சம்மதத்தைப்பெ[...] கூடிய அளவிற்கு வாழ்வில் உய[...] தவன் அல்ல நான். அந்த முய[...] பலன் தராது"

"வேறு என்ன செய்வது?"

"அதுதான் நானும் யோசி[...]கிறேன்"

"யோசியுங்கள். ஆனால் இ[...] விபரீதம் நடக்கு முன்பு யோசித்[...] முடிவுக்கு வாருங்கள். தங்க[...] முடிவு நல்ல முடிவாக இருக்கட்டு[...] என்னைச் சமயத்தில் காப்பாற்ற[...] தாங்கள் தவறிவிட்டால், எ[...] மரணத்தைத் தள்ளிப்போடு[...] ஆற்றல் எனக்கில்லை என்பதை[...] தயவுசெய்து மறந்துவிடாதீர்க[...] தங்களைப்பற்றிய விபரம்கூ[...] எனக்குத்தேவையில்[...] என் வாழ்வையே த[...]ளிடம் ஒப்படைத்துவி[...]டேன். தங்கள் ஆ[...]மையிலும் அன்பி[...]தான் நம்பிக்கைவை[...]துள்ளேன். என்னை[...] காப்பாற்றும் பொறு[...] உங்களுக்கு உண்டெ[...]றால், விரைவில் ஒ[...] முடிவிற்கு வாருங்க[...] இல்லையேல் எ[...] வாழ்வை முடித்து[...] கொள்ள உங்கள் இடு[...]பில் உள்ள கட்டா[...]ரியைத் தாருங்கள்"

"கட்டாரிக்கு மட்[...]மல்ல. இத்தரணியை[...] கட்டியாளும் மன்னரு[...]கும் நம்மைப் பிரிக்கு[...] சக்தி கிடையாது. நா[...] யார்? எங்கு பிறந்தே[...] எங்கு வளர்ந்தே[...] என்று அறியாமல்கூ[...] உன்னை என்னிட[...] ஒப்படைத்துவிட்டா[...] ...தேன்மொழி! கேள்[...] இந்தக் கரம் என்[...] உன்னைத்தொட்டதே[...] அன்று முதல் இன்[...] வரை குற்றங்கள் செ[...]தது கிடையாது..."

ியும் செய்யாது. ஆனல்...... ன்னைத் தொட்டிட எவர் விரும்பி லும், அவர் கையை வெட்ட ியத் தவருது! அச்சம் வேண் ம். இனி உலகில் எனக்கொரு லை உண்டென்று சொன்னல், ன்மொழியை, இந்த மான்விழி க் காப்பதுதான். வானத்தே ாத்தியுள்ள வெள்ளித் தட்டுக் ் களங்கம் உண்டு. வஞ்சி உன் ஞ்சில், அதுவுமில்லை என்பதை றிவேன். பனிநீர் தூய்மை னது என்பர். அதனினும் ய்மையானது உன் காதல்! றுமை வேக்காட்டில் வெந்து க்காடே செல்ல நேரினும் உன் ப் பிரியேன் இது உறுதி! ஆனல்..."

"ஆனல்... அபாயச் சங்கொலி"

"இல்லை... காதலை மதித்து என் ரம்பற்றிச் சாதலே வரினும் பிரி யன் என்ற நெஞ்சுறுதியோடு நீ ருதல் வேண்டும். மாளிகையை திர்பார்த்தல் கூடாது. என் மன ாளிகையைத்தவிர வேறெதையும் ாமுடியாது. எடுபிடிக்களோ ஏவ ாளர்களோ என்னிடம் எதிர் ார்த்திடாதே. கண்ணைக் காவல் ுரியும் இமையைப்போல உன்னைக் ாத்திடுவேன். உன் செம்பஞ்சுப் ாதங்கள் நோகாது என்று என் ல் சொல்லமுடியாது. ஆனல் மென்மையான உன் மனம் நோகாத வாறு நான் நடப்பேன் என்று உறுதியளிக்கின்றேன்"

'அன்பு ஒன்றே போதும். நான் தமிழச்சி. வையகம் பழித்திடாத வாழ்வு எதுவாகினும் ஏற்கத் தயார். நான்பற்றிய கரம் நல்ல கரம் என்று நம்புகிறேன். நல்ல தாக இருந்தால் நல்லதாகவே முடி யட்டும். நான் பொல்லாத கரம் பற்றித் தவறு செய்துவிட்டே னென்றால், இந்த ஒரு தவருேடு என் வாழ்வை முடித்துக்கொள் வேனேயொழிய, வேருெரு கரம் பற்றி மற்ருெரு தவறு செய்யமாட் டேன். இது உறுதி."

"தேன்மொழி! இலக்கியங் களுக்கு இலக்கணமாக இருக்கும் நம் காதல். வருந்தாதே. விடை கொடு......வருகிறேன் விரைவில். நாளை இரவை இங்கே கழித்துவிடு. அடுத்த இரவு உன்னை அழைத்துப் போக வருகிறேன்."

என்று கூறியவாறே கன்னி யவளின கண்ணீர் துடைத்தான். மெல்லியவளிடம் விடைபெற்றுச் சென்ருன்.

புழுதிக் காட்டில் புகுந்திட்ட புயற் காற்ருயிற்று அவன் நெஞ் சம். அவனே கள்வன்! அவளோ இளவரசி! விண்ணுக்கும் மண் ணுக்கும் உள்ள இடைவெளி! 'வையகம் பழியாத வாழ்வு வேண் டும்'—எப்படித் தரமுடியும் அவ னல்? வெடிக்கக் காத்திருக்கும் எரிமலைமீது நடப்பவனைப்போல் வேக வேகமாக நடந்தான் அந்த வேதனை தாங்கி. ஆயிரந் தேள் கள் சேர்ந்தாற்போல் கொட்டி



னலும் இந்த வேதனையை அனு பவிக்கமாட்டான். தனித்த இடம் சேர்ந்தான். எழுந்த எண்ணங் களோடு போராடிற்று அவனது நெஞ்சம்.

'எப்படிச் செய்வது? எதைச் செய்வது?' இந்தக் கேள்விகளுக்கு விடை காண முயன்ருன்...முயன் ருன்.......முயன்ருன்.........முடிய வில்லை! கடைசியாக அமைதி யிழந்த நெஞ்சோடு குகை சேர்ந் தான். சோர்ந்து வரும் அதிக மானைக் கண்ட மார்த்தாண்டன் காரணம் அறிய முயன்ருன். "ஒன்றுமில்லை" என்று சொல்லி விட்டுத் தன் படுக்கையில் போய்ச் சாய்ந்தான். மனமே போராட்டக் களமாக இருக்கும்போது தூக்கம் எப்படி வரும்? எவ்வளவோ முயன்ருன். தோல்வியே கண் டான். மீண்டும் பல எண்ணங்கள் அவன் நெஞ்சில் தலை தூக்கத் தொடங்கின. நெடுநேரப் போராட் டத்திற்குப் பிறகு அவனையும் அறியாமல் தூங்கிவிட்டான். மீண் டும் அதிகமான் விழிக்கும்போது பகலவன் உச்சியினின்றும் மேல் திசையில் சரிந்துகொண்டிருந் தான். கண்களைத் துடைத்தான். ஆனல் அவன் நெஞ்சில் இடந்த பழைய எண்ணங்கள் துடைக்கப் படவில்லை. மீண்டும் பல எண் ணங்கள் எழுந்தன.

தேன்மொழியைக் குகைக்குக் கூடத்திவந்துவிடலாமா?.......நான் கள்ளன் என்று தெரிந்து காதலைக் கொன்றுவிட்டால்...ஆமாம் நான் கள்ளன் என்பதையே அவளுக்குத் தெரிவிக்கக்கூடாது..........வேறு என்ன செய்வது...அவளை மறப்ப தென்பது இனி இயலாது...ஒரு பெண்ணை...அதுவும் என் காதலி யைக் காப்பாற்றக்கூடவா எனக்கு ஆற்றலில்லை?...ஏன் இல்லை?...மனை வியைக் காப்பாற்றும் பொறுப்பு கணவனுடையதுதான்......அந்தப் பொறுப்பினின்றும் நான் தப்ப விரும்பவில்லை......காதலியைக் கைவிடுவதைவிடக் கள்ளத்தொழி லைக் கைவிடல் மேல்...அது என் னல் முடியும்......உலகில் பிறரைப் போல் நானும் நல்லவனுக வாழ வேண்டும்...ஆம். இல்லறம்...இல் லறவாசியாகவேண்டியதுதான்.

என்னை நம்பி உள்ள தந்தை மார்த்தாண்டர்கதி.......அவருக்கு மட்டும் ஏன் இந்தத்தொழில்?...சரி ... அவரைக் கேட்போம்......இந்த முடிவோடு புறப்பட்டான் அதிக மான்.

(தொடரும்)



பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

# எப்படி?

[மா. கி. தசரதன்]

"இந்த ஊரில் யாராவது பெரிய மனிதர் பிறந்திருக்கிறாரா?" வழிப்போக்கர் மிக்க ஆவலோடு கேட்டார் இந்தக் கேள்வியை.

"பெரியமனிதரா?" என்று கேட்டுவிட்டு உள்ளூர்க்காரர் கலகலவென நகைத்தார்.

"ஆமாம், பெரியமனிதர் யாராவது?" ஆவல் குறையாமல் மறுபடியும் கேட்டார். வழிப்போக்கர்.

அவரும் சளைக்காமல் இன்னொரு முறை கலகலவென நகைத்து,

"இங்கே பெரியமனிதர்கள் யாரும் பிறப்பதில்லை — குழந்தைகள்தான் பிறக்கின்றன" என்றார்.

வழிப்போக்கர் இதைக்கேட்டு என்ன சொன்னாரோ நமக்குத் தெரியவில்லை.

ஆனால் உள்ளூர்க்காரர் சொன்னதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன.

உலகத்தில் எத்தனையோபேர் பெரிய மனிதர்களாக இருந்தனர்; இருக்கின்றனர். உடலால் 'பெரிய' மனிதர்கள்; உள்ளத்தால் பெரிய மனிதர்கள்; அறிவால் பெரிய மனிதர்கள்; இப்படி எத்தனையோவகையால் பெரியவர்களாக விளங்கியவர்கள் பலர்.

அவர்கள் அத்தனைபேரும் எப்படி அத்தனை பெரியவர்களாக வளர்ந்தனர்? திடீரென ஒரு நாள் காலை, விழித்து எழுந்தபோது அந்தப் பெருமை அவர்களைத் தேடி வந்தடைந்ததா? காற்றைக்செலுத்தியதும் இரப்பர்பை பெருமளவுக்கு விரிவதுபோல் விரிந்துவிட்டனரா?

இல்லை.

நமது தோட்டத்தின் மூலையில் இருக்கிறதே மாமரம், அதில் ஒரு நாள் காலையில் திடும்எனமொட்டுத் தெரிகின்றதே, அது எப்படி வந்தது? அந்த மொட்டு ஒரு நாள் மலராக மாறியதே, அது எப்படி? அந்த மலர் ஒருநாள் சின்னப் பிஞ்சாக உருவாகியதே அது எப்படி? பிஞ்சு நம் கண் எதிரிலேயே காயாகவும், காய்—அதுவரையில்யாரும் கல்லால் அடித்து வீழ்த்தவில்லையானால், கிளிகடித்துத்துப்பவில்லையானால் — கனியாகக் கனிந்ததே, அது எப்படி? எப்படித் தெரியுமா, கடிகாரத்தின்முள் மெல்ல மெல்லக் கொஞ்சங்கொஞ்சமாக நகர்ந்து மணியாக, நாளாக, கிழமையாக, திங்களாக, ஆண்டாக மாறுகின்றதே, அப்படித்தான்!

உலகத்துப் பெரியோர்கள் எப்படிப் பெரியோர்களாயினர்? அப்படித்தான். கொஞ்சங்கொஞ்சமாக, சிறுகச் சிறுக, நாள்தோறும ஏதேனும் ஒருவகையாக மெல்ல மெல்ல வளர்ந்த வளர்ச்சிதான் அது. பூவிலிருந்து கனி வருவதுபோல் சிறுமையிலிருந்து பெருமை வருகிறது. பெர்னார்ட்ஷா, 'அறிவு கால் பங்கு, உழைபபு முக்கால் பங்கு' என்று சொன்னது இதைத்தான். இந்தப்பையன் மக்கு என்று ஆசிரியர்கள் ஒதுக்கிய சிறுவன்தான் பின்னாளில் உலகம் விரும்பும் இலக்கியம் படைத்த லியோ டால்ஸ்டாய். மெல்ல மெல்ல, வலிவாயினும் சரி, அறிவாயினும் சரி, உள்ளம் ஆயினும் சரி நாமே தேடித்தேடிச் சேமித்துவைக்கும் நிதிதான் ஒருநாள் பெரியதாக — பிறர் கண்டு மலைப்பதாக — மாறுகின்றது.

திடீரென்றுபெரியவர்களாகிவிடுவோம்; பெருமை வந்துவிடும் எனக் கனவும் காணவேண்டாம்; உழைத்துப்பெறவேண்டிய பெருஞ்செல்வம் பெருமை.

நாள்தொறும் ஏதேனும் ஒரு வகையில் வளர்ச்சிக்கான வழியை நாடவேண்டும். 'இது என்ன செய்துவிடப்போகின்றது' என்று எந்தச் சிறு பொருளையும் விலக்குதல் கூடாது. எதிர்ப்படுவது எதுவாயினும், அதனால் தீமை இல்லை என்பதைத் தெளிந்த... னர், ஏற்றுக்கொள்ளுவதில் ... றில்லை. இன்று பயன்படாவிட்... லும் என்றேனும் ஒருநா... எதற்கோ பயன்படும். 'அப்போ... தைக்கு' 'இப்போதே' தேடிவை... துக்கொள்வதில் தவறு என்... இருக்கிறது?

நாள்தொறும் பிறர் படிக்கா... ஏதேனும் ஒன்றனை நீ படி, பி... எண்ணாத ஒன்றனை எண்ணு, பி... சாதாரணம் என ஒதுக்கும் செய... ஏதேனும் ஒன்றனைச் செய்! எ... மேற்குநாட்டுப் புலவர் ஒருவ... கூறியுள்ளார். 'சும்மா' இடங்... பெறும் சுகம் விரும்புவோர்க்... அவர் தரும் அறிவுரை இது.

உண்மையில் 'சும்மா' இருத்... என்பது சுலபமானது அன்... முயன்றவர்களுக்குத் தெரியு... அதன் அருமை. சும்மா கொஞ்... நேரம் இருக்கலாம், நாள் மு... வதும் எப்படி இயலும்? ஒரு நா... முடியலாம் பல நாள் எப்ப... இருக்கமுடியும்? நமது மூளை எ... போதும் ஏதேனும் ஒன்றில மூழ்... யிருக்கும். அபபடி இருக்கு... தன்மையினை நாம் நெறிப்படுத்... நம் வயம் நிறுத்தி, நல்ல ஒழுங்... முறைக்குக் கொண்டுவந்தா... போதும்; செயற்கரிய செய்யலாம்...

அத்தனை ஆற்றல் நம... குள்ளே அடங்கியிருக்கிற... ஆனால் நமக்குள்ளே இந்த... பேராற்றல் இருப்பதைப் போல... தான், சோம்பல் என்ற பெரு... தடையும் இருக்கின்றது! சோம்... பல் எனும் அணையைத் திறந்தா... போதும், அதன் கண்மாய் வ... யாகத் தேங்கியிருக்கும் சு... சுறுப்பு நீர் வெளிப்படும். அ... நீர் பாய்ச்சினால் மூளை வயலி... விளைச்சல் மிகும்! குழந்தை, குழ... தையாக இருந்திடாமல் பெரியவ... களாக மாறலாம்.

அறிவிலும், வலிவிலும் இ... தான் ஏற்பாடு: பிறக்கும்போ... குழந்தையாகத்தான் பிறக்கவே... டும்: பிறந்தபின்னர்தான், காந்... யாக, இலிங்கனாக பெரியாரா... பெரியவர்களாக ஆகவேண்டு... "எப்படி" என்று ஏங்கினால் இ... படியே— இப்போதிருப்ப... போலவேதான் "சிறிய" வர்களா... இருக்க நேரிடும்.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.